# வானவில்

# VAANAVIL

இதழ் 175 ஆடி 2025

ISSUE 175 July 2025


# இனவாதத்தை எப்படி ஒழிப்பது?




இலங்கையில் தற்போது ஆட்சியில் இருக்கும் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஜனாதிபதியும், அதன் முக்கிய அமைச்சர்களும், தமது ஆட்சியின் கீழ் இனவாதத்துக்கு இடமில்லை எனத் திரும்பத் திரும்ப கூறி வருகின்றனர்.

அவர்கள் அவ்வாறு கூறுவது ஒப்பியல் நோக்கில் ஒரு நல்ல விடயமே. ஏனெனில், முன்பு ஆட்சியில் இருந்த தலைவர்கள் இவ்வாறு உறுதிபடக் கூறியது கிடையாது. இன்னும் சொல்லப்போனால், முன்னைய தலைவர்களும், அவர்கள் பிரதிநிதித்துவம் செய்த கட்சிகளும், ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கும், அதைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் (சிங்கள) இனவாதத்தை ஒரு மலிவான ஆயுதமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

ஆனாலும், இலங்கையின் இன்றைய சூழலில் இனவாதத்தை எவ்வாறு ஒழிப்பது என்பது குறித்து – ஜே.வி.பி. உட்பட எந்தவொரு தரப்பினரிடமும் தெளிவான கருத்து நிலைப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு பேசுபவர்கள் அடிப்படையான விளக்கம் இல்லாமலும், மேலோட்டமாகவும் பேசுவது போலத் தோன்றுகிறது.

பெரும்பாலானவர்கள் கருத்து ரீதியான பிரச்சாரத்தாலும், சட்டத்தின் மூலமும் இனவாதத்தை ஒழித்து விடலாம் என நம்புவது போலத் தெரிகிறது. அதற்கு மேலதிகமாக, பொருளாதார ஏற்றத்தாழ்வை அகற்றி, வளர்ச்சியை ஏற்படுத்துவதின் மூலமும் அதைச் சாதித்து விடலாம் என அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

இனவாதத்தை ஒழிப்பதற்கு, முதலில் அது ஏன் ஏற்பட்டது, எவ்வாறு ஏற்பட்டது, அதை ஏற்படுத்தியவர்கள் யார் போன்ற அடிப்படையான விடயங்களை ஓரளவாவது அறிந்து இருந்தால்தான், அதை ஒழிப்பதற்கான முயற்சிகளில் ஓரளவாவது வெற்றிபெற முடியும்.

இன்று நாட்டில் நிலவுகின்ற அனைத்து இனவாதங்களும், தம்மை நியாயப்படுத்துவதற்கு தமது நிலைப்பாட்டை தேசியவாதம் என்றே அடையாளப்படுத்தி வருகின்றனர். அதன் மூலமே அவர்கள் தமது இனத்தைச் சேர்ந்த சாதாரண மக்களது ஆதரவினைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இனப் பிரச்சினை பற்றி இலங்கையில் முதலில் பேசியோர் இடதுசாரிகள்தான். அவர்கள் இனப் பிரச்சினை என்பது பொருளாதாரப் பிரச்சினையின் (ஏற்றத்தாழ்வின்) ஒரு வெளிப்பாடுதான் என சித்தாந்த விளக்கம் கொடுத்தனர்.

இருப்பினும், பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்தால் இனப் பிரச்சினையும் தீர்ந்துவிடும் என அவர்கள் வரட்டுவாதம் பேசவில்லை.இந்த விடயத்தில் பொருளாதாரப் பிரச்சினைக்கும் அப்பால் சில விடயங்கள் இருக்கின்றன எனக் கருதியதால்தான், இலங்கையில் தாம் எதிர்காலத்தில் அமைக்கப்போகும் சோசலிச அரசின் கீழ் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை உத்தரவாதம் செய்வதற்காக அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வுத் திட்டங்களையும் முன் வைத்தனர்.

அந்த வகையில் இடதுசாரிக் கட்சிகளான லங்கா சம சமாஜ கட்சி முன்வைத்த சம அந்தஸ்து திட்டமும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# ‘ஆக்கிரமிப்பு பொருளாதாரத்திலிருந்து இனப்படுகொலை பொருளாதாரம் வரை’

**ஆ**க்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலின் சட்டவிரோத குடியேற்றத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட பன்னாட்டு நிறுவனங்களின் ஈடுபாட்டையும், முற்றுகையிடப்பட்ட காஸா பகுதியில் நடந்து வரும் இனப்படுகொலையையும் அம்பலப்படுத்தி ஐக்கிய நாடுகள் சபை ஜூன் 30ந் திகதி ‘ஆக்கிரமிப்பு பொருளாதாரத்திலிருந்து இனப்படுகொலை பொருளாதாரம் வரை’ (FROM ECONOMY OF OCCUPATION TO ECONOMY OF GENOCIDE) என்ற தலைப்பில் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

ஜூலை 3, வியாழக்கிழமை ஜெனீவாவில் ஐ.நா மனித உரிமைகள் கவுன்சிலில் இந்த அறிக்கையை வெளியிட்டு உரையாற்றிய ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன பிராந்தியத்திற்கான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் ஃபிரான்செஸ்கா அல்பனீஸ் (Francesca Albanese), ஒக்ரோபர் 2023 இல் காஸாவில் இஸ்ரேல் தனது இனப்படுகொலையைத் தொடங்குவதற்கு முன்பு, அதாவது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இந்த அறிக்கையை எழுதியிருக்கலாம் என்று வருத்தத்துடன் தெரிவித்தார். மேலும் அவர், இஸ்ரேலுக்கு எதிரான முற்றுமுழுதான ஆயுதத் தடை உட்பட இஸ்ரேலுடனான அனைத்து வர்த்தக மற்றும் நிதி உறவுகளையும் துண்டிக்க உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

காஸா மக்களது வாழ்க்கை அழிக்கப்பட்டும், பலஸ்தீனியத்தின் மேற்குக்கரை தீவிர தாக்குதலுக்குட்பட்டு இருக்கும் வகையில், இஸ்ரேலின் இனப்படுகொலை ஏன் தொடர்கின்றது என்பதை இந்த அறிக்கை விரிவாக எடுத்துக் கூறுகின்றது:
‘இனப்படுகொலை பலருக்கு இலாபகரமானது.
இனப்படுகொலையாக மாறிய ஓர் ஆக்கிரமிப்பு அரசியல் பொருளாதாரத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவதன் மூலம், முதலீட்டாளர்களும் தனியார் மற்றும் பொது நிறுவனங்களும் சுதந்திரமாக இலாபம் ஈட்டும் அதே வேளையில், எல்லையற்ற விநியோகம் மற்றும் தேவையை வழங்கி, மேற்பார்வை மற்றும் பொறுப்புக்கூறல் எதுவுமற்று, ஆயுத உற்பத்தியாளர்களுக்கும் பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் நிரந்தர ஆக்கிரமிப்பு எவ்வாறு சிறந்த சோதனைக் களமாக மாறியுள்ளது என்பதை அறிக்கை வெளிப்படுத்துகின்றது. பல செல்வாக்கு மிக்க பெரு நிறுவனங்கள் இஸ்ரேலின் நிறவெறி மற்றும் இராணுவவாதத்துடன் பிரிக்க முடியாத வகையில் நிதி ரீதியாக பிணைக்கப்பட்டுள்ளன.’

பலஸ்தீனர்களை இனப்படுகொலை செய்யும் இஸ்ரேலுக்கு தொழில்நுட்பம் உள்ளிட்ட பல வழிகளில் உதவி செய்து வரும் கோர்ப்பரேட் நிறுவனங்களின் பெயர்ப் பட்டியலையும் இந்த அறிக்கை பட்டியலிட்டுள்ளது. அமெரிக்க தொழில் நுட்ப நிறுவனங்களான மைக்ரோசாஃப்ட், அல்பாபெட். (கூகிளின் தாய் நிறுவனம்) அமஷொன், ஐ.பி.எம் (Microsoft, Alphabet, Amazon, IBM) உட்பட ‘48 கோர்ப்பரேட் நிறுவனங்களின் பெயர்கள்’ இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேலும் அந்த அறிக்கையில்,
‘ஆயுத நிறுவனங்கள் இஸ்ரேலுக்கு அதிநவீன ஆயுதங்களை விற்று ஆயுதபாணியாக்கியதன் மூலம் சாதனை படைத்த இலாபங்களை ஈட்டியிருக்கின்றன. அந்த ஆயுதங்கள் பாதுகாப்பற்ற குடிமக்களை கொன்று குவிக்கின்றது. காஸாவை தரைமட்டமாக்குவதிலும், பலஸ்தீனியர்கள் தமது வாழ்விடங்களுக்கு திரும்புவதையும், மறுசீரமைப்பதையும் தடுப்பதில், உலகளாவிய கட்டுமான நிறுவனங்களின் இயந்திரங்கள் கருவியாக இருந்து வருகின்றன. எரிசக்தி அகழ்வு மற்றும் கனிம சுரங்க பெருநிறுவனங்கள், பொதுமக்களுக்கு எரிசக்தி ஆதாரங்களை வழங்கும் அதேவேளையில், இஸ்ரேலின் இராணுவ மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகளுக்கு தேவையான எரிபொருளை வழங்குபவர்களாகவும் உள்ளன. இந்த நிறுவனங்கள் பலஸ்தீனிய மக்களின் வாழ்க்கையை திட்டமிட்டு அழிப்பதற்கான நிலைமைகளை உருவாக்க பயன்படுத்தப்படுகின்றன.

காலனித்துவ முயற்சிகளும் அவற்றுடன் தொடர்புடைய இனப்படுகொலைகளும் வரலாற்று ரீதியாக கோர்ப்பரேட் துறையால் ஊக்குவிக்கப்பட்டும் செயல்படுத்தப்பட்டும் வந்துள்ளன. 2023 ஒக்ரோபர் 7 இல் காஸா மீது இஸ்ரேல் போர் தொடங்கிய பின்னர், காலங்காலமாக பலஸ்தீனர்களை அழித்து, ஆக்கிரமிப்புப் பொருளாதாரத்திற்கு உதவிய மற்றும் அதில் இலாபம் ஈட்டிய நிறுவனங்கள், தற்போது இனப்படுகொலை பொருளாதாரத்தில் ஈடுபட்டுள்ளன. பலஸ்தீன நிலத்தைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பு செய்து வரும் இஸ்ரேலின் நடவடிக்கை “காலனித்துவ இனவாத முதலாளித்துவத்திற்கு” ஒரு தெளிவான எடுத்துக்காட்டு. இந்த சட்டவிரோத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மூலமாக கோர்ப்பரேட் நிறுவனங்கள் பெரும் இலாபம் பெறுகின்றன.

இந்த போர் ஒரு இலாபகரமான வணிகமாக இருந்து வருகிறது. 2023 முதல் 2024 வரை இஸ்ரேலின் இராணுவச் செலவு 65 சதவீதம் அதிகரித்து 46.5 பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது. பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள ஆயுத, தொழில்நுட்ப மற்றும் உள்கட்டமைப்புத் துறை சார்ந்த பல நிறுவனங்களின் இலாபம் 2023 ஒக்ரோபர் முதல் கணிசமாக அதிகரித்துள்ளன. டெல் அவிவின் பங்குச் சந்தை முன்னெப்போதும் இல்லாதவகையில் 179 சதவீதம் அதிகரித்து சந்தை மதிப்பில் சுமார் 157.9 பில்லியன் டொலர்களை ஈட்டியுள்ளது.’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பலஸ்தீனியர்களின் மீது தொடுக்கப்பட்டுள்ள யுத்தத்தின் பின்னாலுள்ள பொருளாதாரக் காரணங்களை விளக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த அறிக்கையை உலகிலுள்ள முன்னணி ஊடகங்கள் இருட்டடிப்பு செய்துள்ளன. அப்படியிருந்தும், அமெரிக்க வெளியுறச் செயலாளர் மார்க்கோ ரூபியோ, இந்த அறிக்கையைத் தயாரித்த, இத்தாலியைச் சேர்ந்த ஃபிரான்செஸ்கா அல்பனீஸ் மீது தடைகளை விதித்துள்ளதாக அறிவித்துள்ளார். ஐ.நா. சபை நியமித்த அறிக்கையாளரை, ஐ.நா. பாதுகாப்புச்சபையில் நிரந்த அங்கத்துவம் வகிக்கும் அமெரிக்காவே தடை செய்யுமளவுக்கு நிலைமை இருக்கின்றதால், இந்த அறிக்கை எவ்வளவு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com
‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து ‘வானவில்’ இதழ்களையும் வாசிக்கலாம்.

# ஈரான் மீது தாக்குதல்: பின்னணி என்ன?




**இ**ஸ்ரேல் காஸாவின் மீது நடத்துகின்ற யுத்தம், உக்ரைன் – ரஸ்ய யுத்தம், இந்திய – பாகிஸ்தான் மோதல், இப்போது இஸ்ரேல் – ஈரான் யுத்தம் ஆகியவை உலக ஒழுங்கு முறையில் (World Order) ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற மாற்றங்களின் வெளிப்பாடாகும்.

இஸ்ரேல் என்ற தனி ஒரு நாட்டின் படையெடுப்பு அல்ல இது. அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகளின் திட்டங்களில் ஒன்றுதான் இந்தத் தாக்குதல். இந்தத் திட்டத்தை அமுலாக்குகின்ற கூலிப்படையாகத்தான் இஸ்ரேல் என்ற நாட்டின் சியோனிஸ்ட்டுகள் இருக்கிறார்கள்.

மத்திய கிழக்கு நாடுகளில் அரபு தேசியம் எழுச்சி பெற்ற போதெல்லாம் அவர்களுக்கு எதிராக இஸ்லாமிய அடிப்படைவாதிகளை அமெரிக்காவும் பிரிட்டனும் தூண்டி விட்டார்கள்.

மத்திய கிழக்கு நாடுகளில் இடதுசாரிக் கருத்துக்கள் வளர்ந்து மக்கள் செல்வாக்கு பெற்ற பொழுது அவற்றையெல்லாம் அழித்தொழிப்பதற்காக மத அடிப்படைவாதத்தை உற்பத்தி செய்தவர்கள் இந்த ஏகாதிபத்தியவாதிகள்.

மாறி வருகின்ற உலக ஒழுங்கில் ஈரான் ரஸ்யாவுடனும் சீனாவுடனும் தனது உறவை மேம்படுத்திக் கொண்டுள்ளது. அது மட்டுமல்ல, சவூதி அரேபியாவுடன் ஈரான் மீண்டும் உறவை ஏற்படுத்தியது மேற்குலகையே அச்சத்துக்குள்ளாக்கியது. அது மட்டுமல்லாது 'பிரிக்ஸ்' அமைப்பிலும் அது முக்கியமான உறுப்பு நாடாகியது.

ஈரான் மத்திய கிழக்கு நாடுகளில் வலுமிக்க ஒரு நாடாக வரலாற்று வேர்களுடன் இருக்கிறது. மக்கள் தொகையிலும் சரி, பரப்பளவிலும் சரி, உலகளவில் 17ஆவது நாடாகவும், ஆசியாவில் 6ஆவது பெரிய நாடாகவும் இருக்கின்றது.

**அ.பாக்கியம்**

எனவே, ஈரானின் வளர்ச்சியும் எழுச்சியும் ஏற்கெனவே அதளபாதாளத்திற்குச் சென்று கொண்டிருக்கிற அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் எண்ணெய் வளக் கனவுகளைக் தகர்த்துவிடும். அந்த அச்சத்தில் இஸ்ரேல் என்ற அடியாளை அமெரிக்கா ஈரானுக்கு எதிராக இறக்கி விட்டுள்ளது.

**ஈரானின் வரலாற்றை எடுத்துக்கொண்டால்**

சிறந்த எழுத்தாளரும் வழக்கறிஞருமான முகமது மொசாடெக் என்பவர் 19 பேர்களுடன் இணைந்து 1949 ஆம் ஆண்டு ஈரான் தேசிய முன்னணி என்ற அமைப்பைத் தொடங்கினார். ஈரானில் 1905 மற்றும் 1911 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட புரட்சிகளின் விளைவாக நாடாளுமன்றம் உருவாக்கப்பட்டது. ஆயினும் மன்னராட்சியின் கீழ் இந்த நாடாளுமன்றம் இருந்தது.

முகமது மெசோடெக் 1923 ஆம் ஆண்டிலேயே ஈரான் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். ஈரானில் ஜனநாயகத்திற்காகவும், அந்நியத் தலையீடுகளுக்கு எதிராகவும் களம் கண்டவர்கள் முகமது மெசோடக்கும் அவரது ஈரான் தேசிய முன்னணியும்.

1951 தேர்தலில் வெற்றி பெற்ற இவரை, இவரது செல்வாக்குக் காரணமாக, பிரதமராக பதவி வகிக்க வைத்தார் மன்னர். ஆனாலும், அவர் பிரதமர் பதவி ஏற்றதைத் தொடர்ந்து மக்களுக்குச் செய்த சேவைகள் காரணமாக அவரது செல்வாக்கு உயர்வதைக் கண்ட மன்னர் அடுத்த ஆண்டே (1952) அவரைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கினார். ஆனால் மன்னரின் முடிவுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்ததால், வேறு வழியின்றி அவரை மீண்டும் பிரதமராக நியமித்தார் மன்னர்.

முகமது மொசாடெக் பிரதமராக இருந்த பொழுது வேலையிழப்புக்கு இழப்பீடு வழங்குவது அறிமுகப்படுத்தப்பட்டது, தொழிற்சாலை உரிமையாளர்கள் காயமடைந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணங்கள் வழங்க வேண்டும் என்ற முறை அமுலுக்கு வந்தது. நிலச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது. நிலச்சுவாந்தர்களின் தோட்டங்களில் இருந்த பண்ணையடிமை முறை இல்லாமலாக்கப்பட்டது. நில உரிமையாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரியில் கிராமப்புற விவசாயிகளுக்கு வீட்டுத் திட்டங்களும், தண்ணீர் வசதிகளும் செய்யப்பட்டன.

அது மட்டுமல்லாமல், 1913 ஆம் ஆண்டிலிருந்து ஈரானின் எண்ணெய் வளத்தைச் சூறையாடி வந்த பிரித்தானிய எண்ணெய் கொம்பனிகளை இவர் தேசியமயமாக்கினார். இதன் மூலம் பிரித்தானியர் ஈரானின் எண்ணெய் வளத்தைக் கொள்ளையடித்ததுக்கு முடிவு கட்டியது மட்டுமல்லாமல், பிரித்தானியா ஈரானின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கும் முடிவு கட்டினார்.

இதற்கு எதிராக பிரித்தானியா அமெரிக்காவினதும், ஐ.நாவினதும் உதவியை நாடியது. முகமது மொசாடெக் ஒரு கம்யூனிஸ்ட்டாக இல்லாது விடினும், ஈரானின்

கம்யூனிஸ்ட் கட்சி என்று கருதப்பட்ட "டுடே" கட்சிக்குச் சார்பாகச் செயல்படுகிறார் என்றும், அவர் அவ்வாறு செயல்படுவது பனிப்போர் காலத்தில் ஆபத்தானது என்றும் பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் வாதிட்டார்.

அமெரிக்கா இந்த விவகாரத்தில் தலையிட முதலில் மறுத்த போதிலும், 1952 இல் ஐஸனனோவர் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவானதும் அமெரிக்காவின் நிலையில் மாற்றம் ஏற்பட்டது.

அமெரிக்கா தனது சீ.ஐ.ஏ. உளவு அமைப்பின் மூலம் முகமது மெசாடெக்கை பதவியில் இருந்து நீக்கும் முயற்சியில் இறங்கியது. ஆனாலும், ஏற்கெனவே இந்த விடயத்தில் மக்கள் எதிர்ப்பைச் சம்பாதித்திருந்த ஈரான் மன்னர் ஷா அவரைப் பதவி நீக்கம் செய்ய மறுத்து விட்டார்.

ஆனாலும் அமெரிக்க சீ.ஐ.ஏவும், பிரித்தானியாவின் M16 என்ற உளவு அமைப்பும் ஈரானில் தளம் அமைத்துக்கொண்டு, மெசோடெக்கின் அரசுக்கெதிராக மக்கள் கலகங்களை உருவாக்க முயன்றனர்.

இறுதியில் அவர்களது முயற்சி வெற்றி பெற்றது. பெரும் தேசபக்தரான அவருக்கு "தேசத்துரோகி" என்று பட்டம் சூட்டப்பட்டு, 1953 டிசம்பர் 21 ஆம் திகதி அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு, தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார். 1967 மார்ச் 5 ஆம் திகதி புற்றுநோய் காரணமாக மரணிக்கும் வரை சிறையிலேயே வைக்கப்பட்டிருந்தார்.

இதன் பிறகு ஈரான் அமெரிக்காவின் கைப்பாவையாக மாறியது. மன்னர் ஷாவின் ஆட்சி 1979 ஆம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சி நடக்கும் வரை இருந்தது. முன்னர் ஷாவின் காலத்தில் ஈரான் அமெரிக்காவின் அடியாளாகிய இஸ்ரேலின் நெருக்கமான நாடாகச் செயல்பட்டது.

1948 இல் இஸ்ரேல் என்ற நாடு உருவான போது ஈரானும் அதை அங்கீகரித்தது. இஸ்ரேல் அரபு நாடுகளுக்கு எதிராக ஈரானை தனது நட்பு நாடாகக் கருதியது. ஈரானிய விவசாய நிபுணர்களுக்கு இஸ்ரேல் பயிற்சி கொடுத்தது. தொழில்நுட்ப அறிவையும் வழங்கியது. ஈரானின் ஆயுதப்படைகளின் கட்டமைப்புக்கும் உதவியது. ஈரான் மன்னர் இஸ்ரேலுக்கு தேவையான எரிபொருளை வழங்கினார். காரணம், இஸ்ரேலின் வளர்ச்சிக்கு எரிபொருள் மிக அடிப்படையான தேவையாக இருந்தது.

அது மட்டுமல்ல, இஸ்ரேலுக்கு வெளியே இரண்டாவது பெரிய யூத சமூகம் ஈரானில் தான் அன்று இருந்தது. இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னரும் 20,000 (இருபதாயிரம்) யூதர்கள் ஈரானில் வாழ்கிறார்கள்.

1979 ஆம் ஆண்டு அய்துல்லா கொமேனி தலைமையில் இஸ்லாமிய புரட்சி ஆட்சி ஏற்பட்டவுடன், இஸ்ரேல் நாட்டுடனான முந்தைய ஒப்பந்தங்கள் யாவற்றையும் ஈரான் அரசு இரத்துச் செய்தது. பலஸ்தீன பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்ததை புதிய ஈரானிய அரசு கண்டனம் செய்தது. இதனால் ஈரானுக்கு மத்திய கிழக்கு பிராந்தியத்தில் செல்வாக்கு வளர்ந்தது.

1982 ஆம் ஆண்டு இஸ்ரேல் தெற்கு லெபனானுக்குள் நுழைந்து உள்நாட்டுக் கலவரத்தை பயன்படுத்த ஆரம்பித்த பொழுது, ஈரானிய அரசு புரட்சிகர காவல்படையை அங்கு அனுப்பி ஹிஸ்புல்லா போராளி குழுவுக்கு உதவியது.

இந்தக் காரணங்களால் அமெரிக்காவும் மேற்கத்தைய நாடுகளும் ஈரான் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் செல்வாக்குப் பெறுவதை விரும்பவில்லை. அதனால் ஈரானுக்கு எதிராக ஈராக்கை தூண்டி விட்டார்கள். ஈரான் – ஈராக் யுத்தம் நடந்த பொழுது, ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசேனுக்கு அமெரிக்கா அனைத்து வகையான இரசாயன ஆயுதங்களையும் கொடுத்து உதவியது. ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்கா ஈராக்கை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டது. (பின்னர் சதாம் ஹூசைன் அபாயகரமான ஆயுதங்கள் வைத்திருக்கிறார் என்று குற்றம் சாட்டி அதே அமெரிக்கா சதாம் ஹூசைனின் ஆட்சியைக் கவிழ்த்ததுடன், அவரையும் கொலை செய்தது)

**இப்போதைய நிலைமை**

தற்பொழுது ஈரானின் வளர்ச்சி உலக ஒழுங்கில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் சீனாவை எதிர்கொள்ள முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றன. உக்ரைன் யுத்தத்தைக் காரணம் காட்டி ரஸ்யாவின் மீது அமெரிக்கா அறிவித்த தடைகளையெல்லாம் ரஸ்யா தவிடுபொடியாக்கிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ரஸ்யாவும் சீனாவும் ஆபிரிக்க நாடுகளுடன் கொண்டுள்ள நெருக்கம் புதிய மாற்றங்களை உருவாக்கி வருகிறது. இத்தகைய ஒரு சூழலில் மத்திய கிழக்கில் ஈரான் ஒரு பலமிக்க நாடாக வளர்ச்சி பெற்றால், அங்குள்ள எண்ணெய் வளங்களைக் கொள்ளையடிக்கும் தமது கனவு நனவாகிப் போய்விடும் என்பதற்காகவே ஏகாதிபத்தியம் ஈரான் மீது தாக்குதல் தொடுக்கின்றது.

எனவே, இந்த யுத்தத்தின் சூத்திரதாரி அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் தான் என்பது தெளிவாகிறது. அமெரிக்காவின் ஆதரவு இஸ்ரேலுக்கு இருக்கும் வரை யுத்தம் நீடிக்கும். மத்திய கிழக்கு நாடுகளில் மக்களின் இரத்த ஆறுகள் ஓடினாலும், அதில் மூழ்கி என்றாலும் எண்ணெய் கிணறுகளின் ஆதிக்கத்தை தக்க வைக்க ஏகாதிபத்திய வெறியர்கள் களம் இறங்கி இருக்கிறார்கள்.

('தீக்கதிர்' பத்திரிகையில் வந்த ஒரு கட்டுரையின் முக்கியமான பகுதிகள்)

---

நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளில் ஒன்றுக் கொண்டு உள்ள தொடர்புகளைக் கண்டறிய வேண்டும். மேலும் இதைச் செய்வதற்காக நாம் அகவய கற்பனையையோ, அப்போதைய ஆர்வத்தையோ அல்லது சாரமற்ற புத்தகங்களையோ சார்ந்திருக்கக் கூடாது, புறவயமாக நிலவுகின்ற சூழல்களைத்தான் சார்ந்திருக்க வேண்டும். உரிய வகையில் தகவல்களைச் சேகரித்து, மார்க்சிய–லெனினிய பொதுக்கொள்கை நெறிகளினை சரியாகப் பின்பற்றி அதிலிருந்து முடிவுகளை வகுக்க வேண்டும். இத்தகைய முடிவுகள் வெறும் அ, ஆ, இ, ஈ வரிசையிலான நிகழ்ச்சிப்போக்குகள் நிறைந்த பட்டியல்களோ, பயனற்ற கூற்றுகள் நிரம்பிய எழுத்துக்களோ அல்ல, அவை அறிவியல் பூர்வமான முடிவுகள் ஆகும். இத்தகைய உளப்பாங்கு என்பது மெய் நிகழ்வுகளிலிருந்து பேருண்மையை தேடுவது, வெற்று பசப் புரையிலிருந்து அனுகூலமானதைப் பெறுவது அல்ல. இதுதான் மார்க்சிய–லெனினிய வழியில் தத்துவத்தையும் நடைமுறையையும் இணைப்பதாகும், உயிரோட்டமான கட்சியின் வெளிப்பாடு இதுவே. எந்தவொரு கட்சி உறுப்பினரும் இந்த அணுகுமுறையை மிக குறைந்த அளவிலேனும் கைக் கொண்டிருக்கவேண்டும்.

**–மாவோ–**

# தேசிய கூட்டுக் குழுவின் (NJC) எச்சரிக்கை!



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின் போது அவருக்கும் இலங்கையின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து தேசிய கூட்டுக்குழு (National Joint Committee) விமர்சனங்களை முன் வைத்திருக்கிறது.

தேசிய கூட்டுக்குழுவின் தலைவரான ஓய்வு பெற்ற லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் டயஸ், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு இது சம்பந்தமாக அனுப்பி வைத்துள்ள கடிதம் வருமாறு:

இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாப்பதில் உறுதி பூண்டுள்ள தேசிய அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாங்கள், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சமீபத்திய ஈடுபாடுகள் மற்றும் ஒப்பந்தங்கள் குறித்து எமது கவலையை வெளிப்படுத்த விரும்புகிறோம்.

அவை நமது நாட்டின் தன்னாட்சி மற்றும் நீண்டகால நலன்களை சமரசம் செய்வதாகத் தெரிகிறது.

இந்தியத் தலையீட்டின் வரலாற்றுச் சூழல், இலங்கையின் சுதந்திரத்துக்குப் பிந்தைய வரலாறு என்பன நமது இறையாண்மையை குறைமதிப்புக்கு உட்படுத்திய இந்திய தலையீடுகளால் நிரம்பியுள்ளது. அவற்றுள் சில வருமாறு:

- தமிழ் போராளி குழுக்களுக்கு இந்தியா நேரடியாக ஆயுதங்களும், பயிற்சியும், பணமும் வழங்கியதன் காரணமாக, இலங்கையில் 30 வருடங்கள் நீடித்த போர் ஏற்பட்டு, அதன் காரணமாக சுமார் ஒரு இலட்சம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.
- விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை இலங்கை இராணுவம் கைது செய்யும் முயற்சியை இந்தியா 1987 இல் தடுத்தது. அதன் காரணமாக போர் 2009 வரை 22 ஆண்டுகள் மேலும் நீடித்தது.
- 1987இல் இந்திய – இலங்கை ஒப்பந்தம் இந்தியாவின் பலவந்தத்தால் ஏற்படுத்தப்பட்டது. அதன் காரணமாக இலங்கையில் இந்திய அமைதிப் படையின் ஆக்கிரமிப்பு ஏற்பட்டு, அந்தப் படையால் கொலைகள், பாலியல் வன்முறைகள் என்பன ஏற்படுத்தப்பட்டன.
- இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட, தமிழ் போராளிகளை நிராயுதபாணியாக்குவது உட்பட்ட ஐந்து உறுதி மொழிகளை இந்தியா நிறைவேற்றத் தவறி விட்டது. அதன் காரணமாக அந்த ஒப்பந்தம் நீண்ட காலத்துக்கு முன்னரே சட்டபூர்வ தன்மையை இழந்துவிட்டது.
- அண்மையில் இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை, நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படாமலும், பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்படாமலும் செய்யப்பட்டுள்ளது. இது இலங்கையின் அரசியல் அமைப்பையும், ஜனநாயக நடைமுறைகளையும் மீறும் செயலாகும்.
- பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தம் (ETCA), வர்த்தகத்தை தாராளமயமாக்குவதற்கான முன்மொழிவு என்பன இலங்கையில் இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இது உள்ளூர் மக்களின் வாழ்வாதாரங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.
- பொருளாதார ரீதியாக இந்தியாவை அதிகமாகச் சார்ந்திருத்தல் மற்றும் இந்தியாவின் மூலோபாய நடவடிக்கைகள் என்பன இந்தியாவின் ஊடுருவலை அதிகப்படுத்தி, இலங்கையை இந்தியாவின் ஒரு செயற்கைக்கோள் நாடாக்கிவிடும்.
- எரிசக்தி மற்றும் உள்கட்டமைப்பு செயல்பாடுகள், திரிகோணமலை எண்ணெய் குதங்கள் மற்றும் புகையிரதத் துறையில் இந்தியாவுடனான கூட்டு முயற்சிகள் என்பன இலங்கையில் இந்தியாவின் ஆதிக்கத்தை வலுப்படுத்தும்.
- இந்திய ரூபாயில் வர்த்தகம் செய்வதற்கான அழுத்தம், இந்தியப் பொருட்களை வாங்க வேண்டும் என்ற இந்தியாவின் நிர்ப்பந்தம் என்பன, இலங்கையின் பொருளாதார சுதந்திரத்தையும், பன்முகத்தன்மையையும் கட்டுப்படுத்துகின்றன.
- இந்திய நிறுவனங்கள் இலங்கையின் நிதி, தொழில்நுட்பம், கண்காணிப்பு மற்றும் டிஜிட்டல் நிர்வாகத் துறைகளில் தங்களை இணைத்துக் கொள்வதன் மூலம், இலங்கையின் மூலோபாயத் தரவுகளை அணுகவும், டிஜிட்டல் உள்கட்டமைப்பின் மீது நீண்டகால கட்டுப்பாட்டைச் செலுத்தவும் முடியும். இது இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் இறைமை என்பனவற்றுக்கு ஆபத்தான விடயங்களாகும்.
- இந்தியா இலங்கையில் உள்ள கோயில்களுக்கு நிதியளிப்பதும், புராணகால மற்றும் இராமாயண சுவடுகளை ஆராய ஊக்குவிப்பதும், இலங்கையின் பௌத்த

பாரம்பரியத்தையும், புத்த சாசனத்தைப் பாதுகாக்கும் அரசியலமைப்பின் 9ஆவது பிரிவையும் குறைமதிப்புக்கு உள்ளாக்குகிறது.

அத்துடன் தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் ஆதிக்க நடவடிக்கைகளுக்கு சில உதாரணங்கள்:

• நோபளம் இந்தியாவின் விருப்பப்படி அதன் அரசியலமைப்பை திருத்த மறுத்ததால், இந்தியா நேபாளத்தை மறைமுகமாக முற்றுகை நிலையில் வைத்தது. இதனால் நேபாளத்தில் எரிபொருள் மற்றும் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது.

• இந்தியா பாகிஸ்தானுடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை இரத்துச் செய்யப் போவதாக அச்சுறுத்தி வருவதுடன், மேலும் பல நதிகளின் நீரோட்டத்தை ஒருதலைப்பட்சமாக கட்டுப்படுத்தி வருகின்றது.

• பணம் செலுத்தும் பிரச்சினை சம்பந்தமாக முன்னறிவித்தல் இன்றி பங்களாதேசுக்கான மின் விநியோகத்தை இந்தியா இடை நிறுத்தியதால், இலட்சக்கணக்கான பங்களாதேஸ் மக்களும், அந்நாட்டின் தொழில்துறைகளும் பெரும் பாதிப்புக்குள்ளாயின.

• பூட்டான் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றி சீனாவுடனான உறவுகளை மேம்படுத்த முற்பட்ட போது, இந்தியா அதற்கெதிராக பூட்டானுக்கான எரிபொருள் மானியங்களை நிறுத்தியது.

• இந்தியா, மாலத்தீவின் உள்நாட்டு அரசியலில் தலையிட்டு அந்நாட்டில் தனது இராணுவத்தை நிறுத்தவும், தனக்கு ஏதுவான நிலையை ஏற்படுத்தவும் முயற்சித்ததால், மாலத்தீவு மக்கள் ஆத்திரமடைந்து ‘‘இந்தியாவே வெளியேறு’’ என்ற கோசத்தை எழுப்பும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

• இவை தவிர, இந்தியா அமெரிக்கா தலைமையிலான “குவாட்” (Quad) இராணுவ அமைப்பில் பங்கேற்பது இலங்கையின் பாதுகாப்புக்கும், அதன் அணிசேராக் கொள்கைக்கும் பாதகமானதாகும். அத்தகைய இந்தியாவுடன் இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கைகளில் ஈடுபடுவது இலங்கையின் நீண்டகால அந்நியோன்ய நட்பு நாடுகளான சீனா, பாகிஸ்தான், ரஸ்யா என்பனவற்றுடனான இலங்கையின் உறவுகளில் விரிசலை ஏற்படுத்தும்.

• இந்தியாவை மட்டுமே சார்ந்திருப்பது, தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பயங்கரவாத அமைப்பைத் தோற்கடிப்பதில் உளவுத்துறை ஆதரவையும், ஆயுத ஆதரவையும் வழங்கிய ஏனைய நாடுகளை சிறுமைப்படுத்துவதாகும்.

• இலங்கையின் முன்னாள் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத்துறைச் செயலாளர் என்.கியு.டயஸ், “வடக்கில் இராணுவ முகாம்களை வைத்திருப்பது தமிழர்களை அச்சுறுத்துவதற்காக அல்ல, தமிழ்நாட்டிலிருந்து வரும் ஊடுருவல்களைத் தடுப்பதற்காக” என்றார். அவரது கூற்று சரியானதும் இன்றைக்கும் பொருத்தமானதுமாகும்.

இந்த விடயங்களின் அடிப்படையில் நாம் உங்களைக் கேட்டுக்கொள்வது யாதெனில்,

• இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட அனைத்து உடன்படிக்கைகளையும் நாடாளுமன்றத்திடமும், பொதுமக்களிடமும் வெளிப்படுத்த வேண்டும்.

• இலங்கையின் தேசிய சுதந்திரம், தேசிய பாதுகாப்பு, இறையாண்மை என்பனவற்றுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் அனைத்து ஒப்பந்தங்களும் மறுமதிப்பீடு செய்யப்பட்டு, தேவையேற்பட்டால் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும்.

• குறிப்பிட்ட ஒரு நாட்டுடன் மட்டும் அணி சேர்வதை விடுத்து, உலகில் உள்ள அனைத்து நாடுகளுடனும் உறவுகளைப் பேணி, எமது அணிசேரா பாரம்பரியத்தைப் பாதுகாக்க வேண்டும்.

• எந்தவொரு ஒப்பந்தம் செய்யும் போதும், இலங்கையின் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் சிறு வணிகர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

• இந்த நெருக்கடியான தருணத்தில் இலங்கை ஒரு சுதந்திரமான, இறையாண்மை கொண்ட நாடாக நீடிக்குமா அல்லது வெளிநாடுகளின் கட்டுப்பாட்டில் தங்கியிருக்குமா என்பதை ஜனாதிபதியான நீங்கள் தீர்க்கமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

## ட்ரம்பின் மிரட்டலுக்கு பதிலடி

பிரேசில் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 50% வரி விதித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்துள்ளதற்கு பிரேசில் ஜனாதிபதி பதிலடி கொடுத்துள்ளார்.

அமெரிக்கா மீது பல்வேறு நாடுகள் அதிக வரிகளை விதிப்பதாக டிரம்ப் குற்றம்சாட்டி சீனா, இந்தியா, இலங்கை உட்பட பல்வேறு நாடுகளுக்கு தொடர்ந்து வரிகளை விதித்து வருகிறார்.

இந்நிலையில், பிரேசில் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு 50 சதவிகிதம் வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் கடிதம் அனுப்பியுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது மோசடி செய்து ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள நினைத்ததாக போல்சனாரோ மீது பிரேசில் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகின்றது.

இந்த வழக்கின் விசாரணை தற்போது தீவிரமடைந்துள்ள நிலையில், பிரேசிலுக்கு ஓகஸ்ட் *1* முதல் 50 சதவிகிதம் வரி விதிக்கப்படும் என்று அந்நாட்டு ஜனாதிபதி லூலாவுக்கு எழுதிய கடிதத்தை பகிர்ந்து, போல்சனோரோவுக்கு எதிரான விசாரணை நடக்கக்கூடாது. உடனடியாக முடிவுக்கு வர வேண்டும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் கடிதத்துக்கு பதிலளித்துள்ள லூலா எக்ஸ் தளத்தில் தெரிவித்ததாவது:

‘பிரேசிலில் ஆட்சி கவிழ்ப்பைத் திட்டமிட்டவர்களுக்கு எதிரான நடவடிக்கை பிரேசிலின் நீதித்துறை அதிகார வரம்புக்குள் மட்டுமே வருகின்றன. நீதித்துறை சுதந்திரமாக செயல்படக்கூடியவை. எந்தவொரு அச்சுறுத்தல்களுக்கும் உட்பட்டவை அல்ல.

பிரேசிலில் கருத்து சுதந்திர ஆக்கிரமிப்பு மற்றும் வன்முறை நடைமுறைகள் எடுபடாது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் அனைத்தும் பிரேசில் சட்டத்துக்கு உட்பட வேண்டும்.

அமெரிக்காவுடன் கடந்த 15 ஆண்டுகளில் 410 பில்லியன் டொலர் வர்த்தகத்தை பிரேசில் கொண்டுள்ளதாக அமெரிக்க அரசின் புள்ளிவிவரங்களே காட்டுகின்றன. அமெரிக்காவின் வரி விதிப்பை பிரேசிலின் பொருளாதார சட்டத்தின்படி எதிர்கொள்வோம்’

# பிறந்தது முதல் அரசியலைச் சுவாசித்துக் கொண்டிருந்த நான் எப்படி அரசியலிலிருந்து விலகி இருக்க முடியும்?

*- சாரு மஜூம்தார் மகன் பேட்டி!*




**இ**ந்தியாவின் 'நக்சல்பாரி இயக்கம்' என்றால் சிறு குழந்தைக்கும் தெரியும். அதன் ஸ்தாபகர் சாரு மஜூம்தார் அவர்களை இந்திய ஆளும் வர்க்கம் கைது செய்து கொடூரமான முறையில் சித்திரவதை செய்த பின்னர் 1997 இல் கொலை செய்தது.

அவரது மகன் அபிஜித் மஜூம்தார் (Abhijit Majumdar) இப்பொழுது அரசியலில் ஈடுபடத் தொடங்கியுள்ளார். அண்மையில் அவர் ஊடகம் ஒன்றுக்கு நீண்ட பேட்டியொன்றை வழங்கியிருந்தார். அதிலிருந்து சில முக்கியமான பகுதிகள்:

**கேள்வி:** நீங்கள் 1997 இல் உங்கள் தந்தை மறைந்து கால் நூற்றாண்டு கழித்து அரசியலுக்குள் நுழைந்திருக்கிறீர்கள். அதற்கு ஏதேனும் சிறப்பான காரணம் உண்டா?

**பதில்:** எங்கள் அம்மா மறைந்த பின்னர் நான் அரசியலுக்கு வந்தேன். பிறந்தது முதல் அரசியலைச் சுவாசித்துக்கொண்டிருந்த நான் எப்படி அரசியலிலிருந்து விலகி இருக்க முடியும்?

**கேள்வி:** நக்சல்பாரி இயக்கத்தின் இன்றைய பொருத்தப்பாடு என்ன?

**பதில்:** நக்சல்பாரி எழுச்சியின் மைய பிரச்சனையாக நிலம் இருந்தது. நிலப்பிரபுக்களிடம் இருந்த கூடுதல் நிலத்தைப் பறித்தெடுப்பது போராட்ட வடிவமாக இருந்தது. நிலமற்றவர்களும் விவசாயத் தொழிலாளர்களும் இப்போராட்டத்தில் சேர்ந்து கொண்டனர்.

இப்போது கோர்ப்பரேட் நிறுவனங்கள் தேசத்தின் வளங்களைக் கொள்ளையடிக்கிறார்கள். நிலம் மறுபடியும் மையமான பிரச்சனை ஆகிவிட்டது. பழங்குடி மற்றும் தலித் அமைப்புகளின் தலைமையில் பல இடங்களில் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. நக்சல்பாரி போராட்டத்துக்குப் பின்பு 50 ஆண்டுகள் கடந்திருந்த போதும், நிலம் மையமான பிரச்சனையாக தொடர்ந்து இருந்து வருகிறது.

அரசுடன் நேரடி மோதல் என்பது ஓர் ஆயுதப் போராட்டமாக மாறலாம். ஆனால் ஆயுதங்கள் ஆதிக்கம் செய்வதை அனுமதித்துவிடக் கூடாது. இயக்கத்துக்குக் கீழ்ப்பட்டதாக ஆயுதப் போராட்டம் இருக்க வேண்டும். மக்களைத் திரட்டுவதைப் பற்றி கவலையின்றி முழுக் கவனமும் ஆயுதப் போராட்டம் என்று ஆகிவிட்டால் விஷயம் தலைகீழாக மாறிவிடும்.

**கேள்வி:** சாதி, ஆணாதிக்கம் போன்ற சில பிரச்சினைகள் ஆழமான வேர்களைக் கொண்டுள்ளன. இப்பிரச்சனைகளை நக்சல் குழுக்கள் உட்பட கட்சிகள் யாரும் கவனத்தில் எடுப்பதில்லையே?

**பதில்:** இப்பிரச்சனைகளை கடந்த காலத்தில் நக்சல் இயக்கம் எடுக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் இப்போது நிலைமை அப்படியில்லை.

நாங்கள் அம்பேத்கரை மறுபடியும் கற்றுக்கொள்கிறோம். அம்பேத்கர் சாதியை ஒழிக்க விரும்பினார். இந்திய சமூக நிலைமைகளில் பார்க்கும்போது இது மிகவும் முற்போக்கான நிலைப்பாடாகும்.

ஒவ்வொரு இயக்கத்திலும் பல்வேறு விதமான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. புதிய பரிசீலனைகள் செய்யப்படுகின்றன. பாலின பாரபட்சம் மிகவும் சிக்கலான ஒரு பிரச்சனை. அது வீட்டிலிருந்து துவங்குகிறது. அதேசமயம், மேற்கத்திய பெண்ணிய தத்துவங்களை பொருத்துவது தீர்வைக் கொண்டுவராது. இந்திய எதார்த்தங்கள் மாறுபட்டவை.

**கேள்வி:** 60கள் 70களின் நக்சல்பாரி இயக்கத்துக்கும் தற்போதைய நிலைமைக்கும் இடையில் அரை நூற்றாண்டு கால வித்தியாசம் உள்ளது. இப்போதைய பிரச்சனைகள் என்று பார்க்கும்போது இயக்கத்தின் நிலைப்பாடுகளில் என்னென்ன மாறுதல்கள் வந்துள்ளன?

**பதில்:** பழைய காலத்து நக்சல் இயக்கம் அடிப்படையில் சிறு விவவசாயிகளையும் விவசாய தொழிலாளர்களையும் ஒரு வர்க்கமாக அணிதிரட்ட முயன்றது. இப்பொழுது பாரம்பரிய விவசாயத்திலிருந்து அவர்கள் அன்னியப்பட்டுவிட்டார்கள்.

கனிம வளம் நிறைந்த வனங்களில் வாழும் பழங்குடிகள் வெளியேற்றப்படுகின்றனர். ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையிலான இடைவெளி விரிந்துகொண்டே போகிறது.

அதிகாரத்தில் இருக்கும் இடது கட்சிகள் மேலும் மேலும் ஏழைகளை விட்டு விலகி போகின்றனர். இடதுசாரிகள் மத்தியில் பெரிய வெற்றுவெளி ஏற்பட்டுள்ளது. ஆர்.எஸ்.எஸ்– பி.ஜே.பி போன்ற பாசிஸ்ட்கள் மென்மேலும் வலுவடைந்து கொண்டிருக்கிறார்கள்.

முதலாளித்துவத்திற்கான கூலித் தொழிலாளர்களை உற்பத்தி செய்யும் ஆலைகளாக பல்கலைக்கழகங்கள் மாறிவிட்டன. பிரதான ஊடகங்கள் கோர்ப்பரேட் கம்பெனிகளின் கைப்பிடியில் உள்ளன. இந்த நிலைமையில் பலவீனப்பட்டு நிற்கிற இடதுசாரி அரசியலைப் பலப்படுத்த நாங்கள் முயற்சி செய்கிறோம்.

**கேள்வி:** கடந்த 25 ஆண்டுகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால் அனைத்து பிரிவினரையும் முதலாளித்துவப் புரட்சி ஆட்கொண்டுள்ளதைக் காண முடியும். இந்த யதார்த்த நிலையை எப்படி மாற்றுவீர்கள்?

**பதில்:** ஆமாம். இது இரண்டாவது சுதந்திரப் போராட்டத்திற்கானநேரம். முதலாளித்துவப் புரட்சியை அழிப்பதன் மூலம் நாம் மீண்டெழ வேண்டும். இரண்டாவது சுதந்திரப் போராட்டம் மிகப்பெரும் புரட்சியாக உருவெடுத்து வருகின்றது. எந்தவொரு இயக்கத்தையும் அரசியல் வழிநடத்த வேண்டும். அதற்கு மக்கள் மத்தியில் ஒரு வெகுஜன அடித்தளம் வேண்டும். ஜனநாயக வழியிலான அனைத்து போராட்ட முறைகளும் தோல்வியடையும் போது வேறு வழியின்றி ஆயுதப் போராட்டம் முன்னுக்கு வரும். அதைப் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும்.

அரசோடு நடக்கும் நேரடி மோதல் ஆயுதப் போராட்டமாக வடிவெடுக்கலாம். ஆனால், ஆயுதங்கள் தீர்மானிப்பதாக நிலைமையை அனுமதிக்கக் கூடாது. இயக்கம் ஆயுதங்களை வழிநடத்த வேண்டும்.

மக்களை அணி திரட்டாமல் ஆயுதப் போராட்டத்தில் மட்டும் கவனம் குவித்தால் விஷயம் திசை மாறிப்போய்விடும்.

**கேள்வி:** கம்யூனிச இயக்கத்தின் மிகப்பெரிய தோல்வி என்று எதைக் கருதுகிறீர்கள்?

**பதில்:** இளைஞர்களை ஈர்க்க முடியவில்லை என்பதுதான் கம்யூனிச இயக்கத்தின் மிகப்பெரிய தேல்வி. நக்சல்பாரி இயக்கத்தின்போது இளைஞர்கள் அதனை நோக்கி ஈர்க்கப்பட்டனர். பல்வேறு படிப்புகளில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் இயக்கம் நோக்கித் திரண்டனர். ஆனால், இன்றைய இளைஞர்கள் முதலாளித்துவ புரட்சி என்ற மாயையில் சிக்கிக்கொண்டுள்ளனர்.

**கேள்வி:** புதிய உலகம் என்பது நடைமுறை சாத்தியமற்ற கற்பனைக் கனவு, புனைவு என்று அதனைப் புறந்தள்ளும் போக்கு இருக்கிறது. எல்லோரும் உடனடி பலன்களை எதிர்நோக்குபவர்கள் ஆகிப் போய்விட்டார்கள்.

**பதில்:** எந்தவொரு புரட்சிகர சிந்தனையும் ஓரளவு புனைவாகத்தான் இருக்கும். இல்லையென்றால் புதிய உலகம் ஒன்றை மனக்கண்ணில் பார்க்க முடியாது. புனைவு கருத்துகளை கருத்தியல் முன்னேற்றமாக மாற்ற வேண்டும். அதற்கு கடின உழைப்பு வேண்டும். கடுமையான நிலைமைகளுக்குத் தன்னை ஆட்படுத்திக்கொள்ளும் விருப்பம் வேண்டும். சமூக அரசியல் கட்டமைப்பில் முழுமையான மாற்றத்தைக் கொண்டுவருவதில் பழைய நக்சல்பாரி இயக்கம் தோல்வியடைந்திருக்கலாம். ஆனால் மாற்றம் குறித்து தலைவர்கள் கண்ட கனவும் கருத்துகளும் இன்றும் பொருத்தம் இழக்கவில்லை. புதிய கருத்தும் மக்களின் போராட்டங்களும் அவற்றை மேலும் வலுப்படுத்தும்.

# சிலி ஜனாதிபதி தேர்தலில் கம்யூனிஸ்ட் வேட்பாளர்



சிலி ஜனாதிபதி தேர்தலில் இடது சாரிகள் கூட்டணி சார்பில் போட்டியிடுவதற்கான வேட்பாளரை தேர்ந்தெடுக்கும் தேர்தலில் போட்டியிட்ட கம்யூனிஸ்டான ஜீனெட் ஜாரா (Jeannette Jara) 60 சதவீத வாக்குகள் பெற்று பெரும் வெற்றி பெற்றுள்ளார். நவம்பர் மாதம் நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலில், "சிலிக்கான ஒற்றுமை" (Unidad para Chile) என்ற இடதுசாரி கூட்டணி கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஜாரா களமிறங்க உள்ளார்.

எதிரணியில் சுதந்திர ஜனநாயக ஒன்றியம் என்ற வலதுசாரி கட்சியின் வேட்பாளர் எவ்லின் மத்தே மற்றும் குடியரசுக்கட்சியின் ஜோஸ் அன்டோனியோ காஸ்ட் ஆகிய இரண்டு வலதுசாரி வேட்பாளர்கள் உள்ளனர். இந்த இருகட்சியும் இணைந்து ஒரு பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுத்தால் போட்டி கடுமையாக இருக்கும். ஆனால் அவர்கள் இணையாத சூழலில் வலதுசாரிகளின் வாக்குகள் பிரிந்து கம்யூனிஸ்ட் வேட்பாளராக உள்ள ஜாரா வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது.

இது போன்ற ஒரு சூழல் சிலி வரலாற்றில் நடந்ததே இல்லை என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். 2022 ஆம் ஆண்டு கேப்ரியல் போரிக் (Gabriel Boric) ஆட்சி அமைத்த போது, ஜாரா அவரது அமைச்சரவையில் தொழிலாளர் மற்றும் சமூகப் பாதுகாப்புத்துறை அமைச்சராக அங்கம் வகித்தார். ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவதற்காக 2025 ஏப்ரல் மாதம் இவர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார்.

சால்வடோர் அலண்டேவின் அரசாங்கத்தை அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செயலாளர் ஹென்றி கிஸிங்கர் சூழ்ச்சியின்படி அந்நாட்டின் இராணுவ தளபதி அகஸ்டோ பினோசெட் கவிழ்த்த பிறகு, அந்நாட்டு அமைச்சரவையில் இடம் பெற்ற முதல் கம்யூனிஸ்ட் ஜாரா மட்டுமே. அலண்டே அரசாங்கத்தில், ஓர்லாண்டோ மில் லாஸூம், லூயிஸ் ஃபிகெரோவா மாசுலா ஆகிய இரண்டு இடதுசாரிகள் நிதி அமைச்சராகவும் தொழிலாளர் மற்றும் சமூகப் பாதுகாப்புத்துறை அமைச்சராகவும் பணியாற்றினர்.

ஜாரா அமைச்சராக இருந்த போது ஓய்வூதிய சீர்திருத்தம் செய்ய வேண்டிய பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. முழு அதிகாரம் இல்லாத போதிலும் அவருக்கு இருந்த வாய்ப்புகளை பயன்படுத்தி சில நேரங்களில் சில கட்சிகளின் ஆதரவுடன் இவரது சாதுரியமான முயற்சியால் புதிய ஓய்வூதிய சீர்திருத்தத்தில் முதலாளிகளின் பங்களிப்பு 7 சதவீதமாக அதிகரித்தது.

தேர்தலுக்கு முன்பாக ஊடகங்களால் மக்கள் மனதில் உருவாக்கப்பட்டுள்ள போலி பிம்பத்தையும் பொய்ப்பிரச்சாரத்தையும் எதிர்கொள்வது உட்பட, கம்யூனிஸ்ட் வெறுப்புப் பிரச்சாரம் திணிக்கப்பட்டுள்ள அந்நாட்டில் மக்கள் மனநிலையை மாற்றியமைக்க வேண்டும் என்ற முதன்மை சவால்கள் ஜாராவிற்கு உள்ளன என கூறப்படுகின்றது.

# இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு வயது 82!

1943 யூலை 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (Communist Party of SriLanka) இவ்வருடம் யூலை 3 ஆம் திகதி அதன் 82 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சி 1943 யூலை 3 இல் நிறுவப்பட்டாலும், அதன் அடிப்படையை அகில இலங்கை இளைஞர் இயக்கம், ஏகாதிபத்திய எதிர்ப்பு ‘சூரியமல்’ இயக்கம், 1935 இல் ஆரம்பிக்கப்பட்ட இடதுசாரி இயக்கத்தின் முன்னோடி கட்சியான லங்கா சமசமாஜ கட்சி என்பவற்றில் காணலாம்.

இலங்கையின் 90 சத வீதமான மக்கள் கல்வியறிவற்கள் எனக் காரணம் கூறி அவர்களுக்கு வாக்குரிமை வழங்குவதை மேட்டுக் குழாமினர் எதிர்த்த போது, வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என வாதிட்ட முன்னோடிகளுள் அகில இலங்கை இளைஞர் இயக்கத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கவும், இலங்கை தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த ஏ.ஈ.குணசிங்கவும் அடங்குவர். இவர்கள் இருவரும் முதல் சட்டசபைக்கு (State Council) தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்.

இடதுசாரிகளைப் பிரதிநிதித்துவப்படுத்திய டாக்டர் என்.எம்.பெரேரா, பிலிப் குணவர்த்தன, டி.எம்.ராஜபக்ஸ ஆகியோர் இரண்டாவது சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். டாக்டர் விக்கிரமசிங்க இரண்டாவது சட்டசபைத் தேர்தலில் தோல்வியுற்றாலும், 1945 ஆண்டு மொரவக்க தொகுதியிலிருந்து பெரும் வித்தியாசமான பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று மீண்டும் சட்டசபைக்குள் நுழைந்தார்.

முதலாவது நாடாளுமன்றத்துக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் 5 உறுப்பினர்கள் தெரிவானார்கள். இவர்களில் 4 பேர் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள்.

அப்போதைய குருநாகல் எம்.பி. ஆன எச்.ஸ்ரீ நிஸங்கவின் இல்லத்தில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க ‘யமுனா’ மாநாட்டில், முதலாவது நாடாளுமன்றத்தில் ஓர் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமைப்பதற்கு கம்யூனிஸ்ட் கட்சி முன்முயற்சி எடுத்தது. சித்தாந்த முரண்பாடுகள் காரணமாக



Dr. S. A. Wickremasinghe



DEW Gunasekara

இந்த முயற்சி தோல்வியடைந்தது. அந்த முயற்சி வெற்றி பெற்றிருந்தால் இலங்கையின் வரலாறே வேறு விதமாக மாறியிருந்திருக்கும்.

அதன் பின்னர் 1950 ஆம் ஆண்டு நடைபெற்ற கட்சியின் 4 ஆவது தேசிய மாநாட்டில் ‘ஐக்கிய முன்னணி’ என்ற கோட்பாட்டை விவாதிக்க வேண்டிய ஒரு கருத்தாக கம்யூனிஸ்ட் கட்சி நாட்டின் முன் வைத்தது.

**டியு குணசேகர**
**தலைவர், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி**

அதைத் தொடர்ந்து 1951ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி – லங்கா சமசமாஜ கட்சி ஐக்கிய முன்னணி உருவானது. 1956 இல் மக்கள் ஐக்கிய முன்னணி உருவானது. 1963 இல் இடதுசாரி ஐக்கிய முன்னணி உருவானது. 1964 இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சி – லங்கா சமசமாஜக் கட்சி கூட்டணி அரசாங்கம் ஏற்பட்டது. அது பின்னர், சிறீலங்கா சுதந்திரக் கட்சி – லங்கா சமசமாஜக் கட்சி –இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஐக்கிய முன்னணியாக விரிவடைந்தது.

அரசியல் படுகொலைகள், இராணுவ சதி முயற்சி, இளைஞர்களின் ஆயுதக் கிளர்ச்சி மற்றும் பலவித பின்னடைவுகள் இருந்த போதிலும், நாட்டில் ஏற்பட்ட மாபெரும் பொருளாதார – சமூக – கலாச்சார சாதனைகள் அனைத்தும் ஐக்கிய முன்னணி அரசாங்கங்களால் ஏற்பட்டதாகும்.

1947 இல் முதலாவது பொதுத் தேர்தல் நடைபெற்ற பின்னர் 30 ஆண்டு காலம் நாடு பல விதமான மாற்றங்களைக் கண்டது.

1978 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன கொண்டு வந்த நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்திய அரசியல் அமைப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர், நிறைவேற்று ஜனாதிபதி முறையின் கீழ் ஒரு பொருளாதார உத்தியாக நவ – தாராளவாதத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் நவ – தாராளவாத பொருளாதாரக் கொள்கை ஏற்கப்பட்டு நாடு புதியதொரு காலகட்டத்துக்குள் பிரவேசித்தது.

1977 முதல் 1994 வரையான ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செய்த 17 ஆண்டு காலம் “கறுப்பு காலகட்டம்” என வரலாற்றில் குறிக்கப்படுகிறது. இந்தக் காலகட்டம் நாட்டில் வன்முறை நிறைந்த காலகட்டமாகும்.

சுதந்திரத்துக்குப் பிந்தைய வரலாற்றின் இந்த இருண்ட காலம் 1994 இல் சந்திரிக பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் முடிவுக்கு வந்தது.

இந்த நேரத்தில் சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளின் வீழ்ச்சியுடன் உலக ஒழுங்கு மாறிவிட்டது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நிர்வாகத்தின் கீழ் 2009 இல் உள்நாட்டுப் போர்

முடிவுக்கு வந்தது.

2008இல் ஏற்பட்ட உலகளாவிய நிதி நெருக்கடி காரணமாக உலகப் பொருளாதார நிலைமையில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் நிதி மற்றும் பணவியல் கொள்கைகள் பொருளாதார நெருக்கடியை அதிகப்படுத்தியது. இதனால் 2022 இல் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச நாடு திவாலடைந்துள்ளதை அறிவித்தார்.

இந்த நிலைமைகளால் ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி, சிறீலங்கா பொதுஜன பெரமுன என்பன சிதைந்து போக, அந்த சூழ்நிலை காரணமாக ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி தேர்தல்களில் வெற்றி பெறும் சூழ்நிலை உருவானது.

புதிய அரசாங்கத்தின் அடித்தளமாக கருப்புப் பொருளாதாரமும் கடன் பொருளாதாரமும் உள்ளது. இது என் பார்வையில் நெருக்கடியில் உள்ள நவ – தாராளவாதத்தின் உச்சக் கட்டமே தவிர வேறில்லை. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதன் சொந்தப் பிரச்சாரத்திற்கே பலியாகிவிட்டது.

“ஊழல் எப்போதும் இருந்தது – வேறுபாடு அளவுகளில் உள்ளது. நவ – தாராளவாதத்தின் கீழ் அது எங்கும் நிறைந்ததாகவும், சர்வ வல்லமையுள்ளதாகவும் உள்ளது.”

நெருக்கடிக்கான அடிப்படைக் காரணம் புதிய தாராளமயம் என்பதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வசதியாக மறந்துவிட்டது. அதனால் சர்வதேச நாணய நிதியம் என்ற மீட்பரிடம் அடைக்கலம் தேட வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

உலகப் பொருளாதாரத்தின் அடிப்படை யதார்த்தங்களையும், உலகப் பொருளாதார சக்திகளின் சம நிலையில் ஏற்படும் தீர்க்கமான மாற்றங்களையும், வளர்ந்து வரும் புதிய உலகப் பொருளாதாரத்தின் பன்முகத் தன்மையையும், அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் உணர வேண்டிய நேரம் இது.

இலங்கையைப் பொறுத்தவரை, ‘பிரிக்ஸ்’ (BRICS) அமைப்பில் இணைந்து தெற்கு உலகின் (World South) பங்காளியாக இருப்பதைத் தவிர வேறு வழியில்லை. உலக மக்கள் தொகையில் 87 சத வீதமானோரின் சந்தை தெற்கு உலகில்தான் இருக்கிறது. மூலதனமும் தெற்கில்தான் இருக்கிறது.

‘பிரிக்ஸ்’ அமைப்பும், சீனா முன்னெடுத்து வரும் ‘தடம் மற்றும் பாதை முன்முயற்சி’யும் (Belt and Road Initiative) உலகப் பொருளாதார சக்திச் சமநிலையை வெகுவாக மாற்றியுள்ளன. உலக சனத்தொகையில் 13 சதவீதத்தை மட்டும் கொண்ட உலகின் வடக்குப் பகுதி கடுமையான நெருக்கடியில் உள்ளது. உலக சனத்தொகையில் 4 சதவீதத்தை மட்டுமே கொண்ட அமெரிக்கா தனது உலக மேலாதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் பகீரத முயற்சியில் ஈடுபட்டுள்ளது. என்ன செய்தாலும் டொலரின் மதிப்பிழப்பைத் தடுத்து நிறுத்த முடியாது.

இலங்கையின் அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த அடிப்படையான யதார்த்தங்களை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சுய – விமர்சனம் செய்து கொண்டு நேர்மையான பாதையில் செல்வதற்கு காலம் கடந்து விடவில்லை. பொருளாதார இறையாண்மை, பொருளாதாரப் பாதுகாப்பு, பொருளாதாரச் சொத்துக்களுக்கு முன்னுரிமை என்பனவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இந்த மூலோபாயத்திற்கு தொலைநோக்குப் பார்வையும் திட்டமிடலும் அவசியமாகும்.

## நேட்டோ நாடுகளின் இராணுவ நிதி ஒதுக்கீடு அதிகரிப்பானது வரவிருக்கும் போர்களுக்கான எச்சரிக்கை

**நேட்**டோவின் உறுப்பு நாடுகள் மாநாடு, கடந்த 25.06.2025 அன்று கூடியது. அதில், அனைத்து உறுப்பு நாடுகளும் ஒவ்வொரு வருடமும் தங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% வரை நிதியைப் பாதுகாப்புத் துறைக்காக ஒதுக்குவது என முடிவு செய்துள்ளன. ஏற்கனவே முடிவு செய்துள்ள 2% நிதி ஒதுக்கீட்டை வருகின்ற 2035 இற்குள் 50% ஆக உயர்த்துவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் தீர்மானித்துள்ளது. இவை நாட்டையும் – மக்களையும் பாதுகாக்காது, பலியிடவே செய்யும். ஏற்கனவே கடனில் மூழ்கியுள்ள ஸ்பெயின், இதற்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த அளவிற்கு நிதியை உயர்த்த வேண்டிய அவசியம் என்ன என்கிற கேள்வி எழலாம். எல்லாம், அமெரிக்கா தலைமையிலான நேட்டோவின் மேலாதிக்கத்திற்கு போட்டியாக வளர்ந்து வரும் ரஷ்யா – சீனா தலைமையிலான அணிசேர்க்கையின் விளைவே. பனிப்போர் காலத்தில் சோவியத் யூனியனின் செல்வாக்கு பெருகி பரவி வருவதையும் மேலை நாடுகளுக்கு அச்சுறுத்தலாக வளர்ந்து வருவதையும், குறிப்பாக அண்டை நாடுகளுக்கு சோஷலிசம் பரவி வருவதையும் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டதே நேட்டோ கூட்டமைப்பு.

இதற்கு தலைமை தாங்கி வழி நடத்தி வரும் அமெரிக்காவே ஆரம்பத்தில் அதிரடியான பங்களிப்பை செலுத்தி வந்தது. ஆப்கானிஸ்தான், ஈரான் போன்ற பல்வேறு நாடுகளில் மேலாதிக்கத்தை செலுத்த முனைந்து அடி வாங்கியதன் விளைவு, பொருளாதார இழப்பு, உள்நாட்டில் நெருக்கடி, உள்நாட்டு மக்களின் பலத்த எதிர்ப்பு போன்றவைகளால் விழி பிதுங்கி நிற்கிறது அமெரிக்கா. இச்சூழலில் நேட்டோ நாடுகள் கூட்டாக நடத்தும் ஆக்கிரமிப்பு போர்களுக்கும் அமெரிக்கா மட்டும் ஏன் அதிகமான அளவிற்கு பங்களிப்பைச் செலுத்த வேண்டும் என்கிற அமெரிக்காவின் முன்னெடுப்பே இராணுவ பாதுகாப்பிற்கான 5% நிதி ஒதுக்கீட்டு முடிவு.

1949 இல் நேட்டோ துவங்கப்பட்ட போது, சோவியத் யூனியன் மட்டுமே அச்சுறுத்தலாக இருந்தது. இன்று ரஷ்யா – சீனா தலைமையிலான அணிசேர்க்கை நேட்டோவின் அச்சத்தை அதிகப்படுத்தி உள்ளது. மேலும், ரஷ்யாவின் உக்ரைன் உடனான போருக்கு சீனாவும், வடகொரியாவும் ஆயுதங்கள் கொடுத்து உதவியதும் இவற்றை உறுதிப்படுத்தியுள்ளது. அதனால்தான் நேட்டோ மாநாட்டில் ரஷ்யாவின் அச்சுறுத்தலுக்கு தீர்வுகாண வேண்டுமென்றும், உக்ரைன் போருக்கு ரஷ்யாவிற்கு சீனா உதவியுள்ளதை

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# இன்றைய ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகள்




அண்மைக் காலமாக இன்றைய ஏகாதிபத்தியத்திற்குள் தோன்றியுள்ள முரண்களுக்கு, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் விசித்திரமான நடவடிக்கைதான் காரணம் என்று, பொதுவாக தாராளவாதிகளின் வட்டாரத்தில் குற்றம் சாட்டப்படுகிறது. அவர் தான்தோன்றித்தனமாக, பீங்கான் கடைக்குள் புகுந்ததொரு முரட்டுக் காளையாக செயல்படுவதன் மூலம், ஏகாதிபத்திய முகாமில் முன்பு நிலவி வந்த ஒற்றுமையை நொறுங்கச் செய்தார் என்கிறனர். இந்த பகுப்பாய்வு மிகவும் மேலோட்டமான ஒன்றே ஆகும்.

அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் ஐரோப்பிய பொருட்களுக்கான சுங்க வரி என்பது ட்ரம்ப் வருகைக்கு முன்பே நிலவிய ஒன்றுதான். (ரஷ்யாவில் இருந்து கடல் வழியாக அமைக்கப்பட்டிருந்த எரிவாயுக் குழாய்) நோர்ட் ஸ்ட்ரீம் 2 தகர்க்கப்பட்டதன் மூலம், அமெரிக்காவையே தனது எரிசக்திக்காக நம்பியிருக்க வேண்டிய நிலைமைக்கு ஐரோப்பா ஏற்கனவே தள்ளப்பட்டிருந்தது. ஜெர்மனி, தன்னுடைய முதலீடுகளை மீண்டும் தன் நாட்டுக்கே மாற்றுவதன் மூலம், தொழில்மய நீக்கத்தை (deindustrialization) நோக்கிச் செல்லும் செயல்முறைகள் ட்ரம்ப் வருகைக்கு முன்பே தொடங்கிவிட்டன. இந்தப் போக்குகளை இன்னும் வேகமாக முன்னெடுப்பவராக, ‘அமெரிக்காவை மீண்டும் மகத்தானதாக்குவோம்’ என்ற முழக்கத்துடன் ட்ரம்ப் செயல்படுகிறார். எனவே, இப்போது நாம் கண்டுவரும் போக்கு அவருக்கு மட்டுமே சொந்தமான ஒன்றல்ல.

ஐரோப்பிய ஒன்றியத்தின் விருப்பத்திற்கு மாறாக, உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்காக எடுக்கப்படும் முயற்சிகள் புதியவை என்பது உண்மைதான். இந்த நடவடிக்கையும் கூட, மீள முடியாத ஒரு நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்த சூழலில் இருந்து ஏகாதிபத்தியத்தை மீட்பதற்கான ஒன்றே ஆகும். அணு ஆயுத மோதல் என்ற அபாயகரமான கட்டத்திற்கு போரை தீவிரப்படுத்துவது அல்லது, போரை இழுத்தடிக்க அனுமதிப்பது என்ற இரண்டு வாய்ப்புகளில் ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்கனவே உருவாகியிருந்தது.

**பேராசிரியர் பிரபாத் பட்நாயக்**

போரில் படிப்படியாக ரஷ்யா மேலாதிக்கம் பெற்று வந்தது. ரஷ்யாவையும், சீனாவையும் சுற்றி, ஏகாதிபத்திய மேலாதிக்கத்திற்கு எதிரான நாடுகளுடைய முகாம் மெல்ல ஒருங்கிணைந்து வந்தது. எனவே, வேறு வார்த்தைகளில் சொன்னால், உக்ரைன் போரில் ட்ரம்ப் எடுக்கக் கூடிய நிலைப்பாடு, ஏகாதிபத்திய உத்தியின் மாறுபட்டதொரு வெளிப்பாடே ஆகும். ஏகாதிபத்திய முகாமில் நிலவும் வேறுபட்ட பொருளாதார நலன்களின் அடிப்படையில் முகிழ்த்துவரும் முரண்பாடுகளால்தான் இவ்வாறு நடப்பதாக பார்க்க முடியாது. அதே சமயம், ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் உண்மையானவை. இன்று நாம் கவனிக்கும் விரிசல்கள் அந்த முரண்களின் காரணமாக எழக்கூடியவையே. டொனால்ட் ட்ரம்ப்–இன் கோமாளித்தனங்களால் அல்ல.

**பொருளாதார மந்தநிலையும் நவ–பாசிச பரவலும்**

ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் மந்தநிலையில் வேர் கொண்டுள்ளன. இந்த மந்தநிலையின் பரிமாணம் பின்வரும் புள்ளிவிவரங்களிலிருந்து தெளிவாகின்றது. 1961க்கும் 1973க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் உலகப் பொருளாதாரத்தில் மெய்யான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 5.4 சதவீதமாக இருந்தது. 1973க்கும் 1984க்கும் இடையிலான ஆண்டுகளில் இது 2.9 சதவீதமாக இருந்தது. 1984க்கும் 1997க்கும் இடையே இது 3.1 சதவீதமாக இருந்தது. ஆனால் இந்த விகிதம் 2007 மற்றும் 2018க்கு இடையில் 2.7 சதவீதமாகக் குறைந்தது. இந்த பத்தாண்டுகால வளர்ச்சி விகிதம், இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலத்தில் மிக மெதுவான விகிதமாகும். தாராளவாத வட்டங்களில், பொருளாதார மந்த நிலைக்கு காரணமாக சொல்லப்படும் கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு முன்பே இந்த நிலைமைதான் நிலவியது என்பதை நாம் பார்க்க வேண்டும்

நவதாராளமய காலத்து முதலாளித்துவமானது, மொத்த உற்பத்தியில் பொருளாதார உபரியின் பங்கை தொடர்ந்து உயர்த்துகிறது. அதன் மூலம் ஒவ்வொரு நாட்டுக்குள்ளும், உலக அளவிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அதிகரிக்கிறது. நவதாராள முதலாளித்துவத்தின் இந்த உள்ளார்ந்த போக்கிலேயே மந்த நிலைமைக்கான காரணத்தை நாம் அடையாளம் காண முடியும். முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலேயே இவ்வாறு நடப்பதற்கான காரணம், அங்கேயுள்ள மூலதனம், தனது உற்பத்தி நடவடிக்கையை குறைந்த கூலி உள்ள மூன்றாம் உலக நாடுகளுக்கு மாற்றிட மேற்கொள்ளும் முனைவாகும்.

கடந்த கால காலனித்துவம் காரணமாக, மூன்றாம் உலக நாடுகளில் தொழில்மய

நீக்கம் நடந்ததுடன், உபரியும் உறிஞ்சப்பட்டிருந்தது. இதுதான் அங்கே பெரும் உழைப்பாளர் படை நிலவிடக் காரணமாக அமைந்தது. மேற்சொன்ன நிகழ்வுப் போக்கினால், புவிக் கோளத்தின் வடக்கில் உள்ள (வளர்ச்சிபெற்ற) நாடுகளில், தொழிலாளர்களுடைய பேரம் பேசும் வலிமை குறைகிறது. உற்பத்தி திறன் உயர்வுக்கேற்ப ஊதியம் உயராமல் தடுக்கிறது. மூன்றாம் உலக நாடுகளில் இருந்து, தொழிலாளர்கள் இடம்பெயரும் போதிலும் கூட, தொழிலாளர் இருப்பு முற்றிலும் தீர்வதில்லை. மாறாக, அதிகரிக்கவே செய்கிறது. சிறு உற்பத்தியின் மீது, நவதாராளமயக் கொள்கைகளால் நிகழ்த்தப்படும் தாக்குதலின் காரணமாகவும், வர்த்தக தாராளமயமாக்கலின் விளைவாக தொழிலாளர்களுடைய உற்பத்தி திறன் வளர்ச்சி பெருமளவு வேகப்பட்டிருப்பதன் காரணமாகவும் இவ்வாறான அதிகரிப்பு நடக்கிறது.

இந்த உண்மை நிலைமை காரணமாக, தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் அதிகரித்தாலும் அவர்களுடைய உண்மை ஊதியமானது, பிழைப்பாதார மட்டத்துடனே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, புவிக்கோளத்தின் வடக்கிலும், தெற்கிலும் என இரு தரப்பிலுமே பொருளாதார உபரியின் பங்கு அதிகரிக்கிறது. மேலும், உபரியில் இருந்து நுகர்வு குறைகிறது. உழைக்கும் மக்கள் வருமானத்திலோ பெரும்பகுதி நுகர்வுக்கே செல்கிறது என்ற நிலைமை் கிராக்கி அதிகரிப்பதை மந்தமாக்குகிறது. இதன் விளைவுதான், உலக உற்பத்தியில் ஏற்படும் ஒட்டுமொத்த சரிவு ஆகும்.

மிகை உற்பத்தியை நோக்கிய போக்கினை உருவாக்கிய நவதாராளமயம் அத்தோடு நிற்கவில்லை. இந்தப் போக்குக்கு எதிராக, அரசு தலையீடு செய்வதற்கான சாத்தியத்தையும் அது தடுக்கிறது. ஏனென்றால், ஒட்டுமொத்தமாக தேவையை அதிகரிக்கும் எந்தவொரு அரசு செலவினத்திற்குமான நிதியை பெறுவதற்கு, நிதிப் பற்றாக்குறையை உயர்த்த வேண்டும் அல்லது பணக்காரர்களுக்கு வரிவிதிக்க வேண்டும். நிதிப் பற்றாக்குறையை உயர்த்தும்போது, அந்த நேர்வில் யாருக்கும் வரி விதிக்கப்படவில்லை. எனவே அரசின் செலவினத்தை அதிகரித்தாலும் கூட யாருடைய நுகர்வுச் செலவும் குறைவதில்லை. அதே சமயம், பணக்காரர்கள் மீது வரி விதித்தால், அவர்கள் தமது வருமானத்தில் ஒரு சிறு பகுதியை மட்டுமே நுகர்வுக்காக பயன்படுத்துவோராக இருப்பதால் அந்த வரியில் ஒரு பகுதி அவர்களுடைய சேமிப்பில் இருந்து செல்கிறது. சிறு பகுதி மட்டுமே அவர்களின் நுகர்வுச் செலவினங்களில் இருந்து எடுக்கப்படுகிறது. இதனால், நிதிநிலை அறிக்கையில் சமநிலை இருந்தாலும் கூட, அரசாங்கம் தனது வரி வருவாயைச் செலவு செய்யும்போது, அதனால் மொத்த கிராக்கியில் நிகர அதிகரிப்பு ஏற்படுகிறது.

அதே நேரத்தில், அரசாங்க செலவினங்களுக்கான ஆதாரங்களை திரட்டுவதற்காக ஏழைகள் மீது வரி விதிப்பது ஒட்டுமொத்த கிராக்கியை அதிகரிக்க உதவாது, ஏனெனில், எப்படியும் ஏழைகள் தங்கள் வருமானத்தின் பெரும்பகுதியை நுகர்விற்குதான் செலவிடுகின்றனர். ஆனால், நிதி மூலதனமானது பணக்காரர்கள் மீது வரி விதிப்பதையும், பற்றாக்குறையை அதிகரிப்பதையும் எதிர்க்கிறது. இந்த எதிர்ப்பை தெரிவிப்பதில் முக்கியமானவர்கள் நிதியாளர்களே. நவீன தாராளமயத்தின் கீழ் நிதி மூலதனம் உலகமயமாக்கப்படுவதாலும், அரசு ஒரு தேசிய அரசாக இருப்பதாலும், நிதி வெளியேறுவதைத் தவிர்க்க வேண்டுமானால், முந்தையவரின் ஆணைக்கு ஒரு தேசிய அரசு கீழ்ப்படிந்தாக வேண்டும்.

எனவே, தேசிய அரசாங்கம் எதுவும், உலகமய நிதியத்தின் ஆணைகளை எதிர்த்து, மொத்த கிராக்கியை உயர்த்துவதற்கான நிதிக் கொள்கைகளை முன்னெடுக்கிற நிலைமையில் இல்லை. மேலும், (இப்போது பின்பற்றப்பட்டு வரும் பணவியல் கொள்கை ஒட்டுமொத்த கிராக்கியை உயர்த்துவதற்கு பயனற்றது. அதே சமயம், கிராக்கியை குறைக்க இது பலனளிக்கக் கூடும்) மந்தநிலை தொடங்கிய 2007க்குப் பிந்தைய காலகட்டத்தின் பெரும்பகுதியில், புவிக்கோளத்தின் வடக்கில் அமைந்த நாடுகள், தம் வட்டி விகிதங்களை பூஜ்ஜியத்திற்குக் கீழே தள்ளும் புள்ளிக்கு, விரிவாக்கத்தை நோக்கிய பணக் கொள்கையைப் பின்பற்றி வந்தன. ஆனால் இந்த நடவடிக்கைகள் மந்தநிலையை மாற்றியமைக்கவில்லை.

இப்போதைய மந்தநிலைமையின் காரணமாக, முதலாளித்துவ நாடுகளில் பெரிய அளவிலான வேலையின்மை ஏற்பட்டுள்ளது. நவதாராளமயத்தின் உச்ச காலத்தில் இருந்ததை விடவும் இப்போது அதிகமான வேலையின்மை நிலவுகிறது. (ஐம்பதுகள், அறுபதுகள், எழுபதுகளின் தொடக்கத்தில் நிலவிய வேலையின்மையை விடவும் இது அதிகமாகும்). இதன் விளைவாக, உலகம் தழுவிய நவ பாசிச வளர்ச்சிப் போக்கு உருவாகியுள்ளது. நாடுகளில் உள்ள பெருநிறுவன–நிதி சக்திகள், இந்த நவ பாசிச குழுக்களுடன் கூட்டணி அமைத்திருக்கிறார்கள். அவர்கள் நவ பாசிச ஆட்களுக்கு நிதி கொடுத்தும், ஊடக வெளிச்சம் கொடுத்தும், திசைதிருப்பல் வாதங்களை உருவாக்குகிறார்கள். மத அடிப்படையிலோ, இன அடிப்படையிலோ சிறுபான்மையினரை தனிமைப்படுத்துவதுடன், பெரும்பான்மையினரிடம் அவர்களுக்கு எதிரான வெறுப்பை உருவாக்குவதாக இந்த போக்கு அமைகிறது.

அதேநேரத்தில் உழைக்கும் மக்களைப் பிளவுபடுத்தி, அவர்களின் மெய்யான துயரங்களை மாற்றுவதற்கான போராட்டங்களை திறம்பட முன்னெடுக்கவியலாமல் செய்கிறது. இந்த நவ பாசிசக் குழுக்கள், தத்தமது நாடுகளில் ஏகபோகக் குழுக்களின் நலன்களையே முன்னெடுக்கின்றன. அதே சமயம், 1930களில் பாசிசவாதிகள் செய்ததைப் போலவே, புதிய ஏகபோக மூலதனத்தின் ஒரு பிரிவுக்கு மட்டும் நெருக்கமாக நடந்துகொள்கின்றன. நவ பாசிச அரசாங்கங்களாலும் பொருளாதார மந்த நிலைமையை மாற்றியமைக்க இயலாது. தாராளமய–முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு உள்ள அதே காரணங்கள்தான் இதற்கும்: நவ பாசிசத்தின் கீழும் ஒரு அரசு தேசிய அரசாகவே தொடர்கிறது. ஆனால், நிதி மூலதனமோ, உலகமயமாக்கப்பட்டுள்ளது. எனவே, உலகமய நிதி மூலதனத்தின் முன்னுரிமைகளைப் புறந்தள்ளியோ, பணக்காரர்கள் மீது வரி போடுவதன் மூலமோ நிதிப் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் திராணியற்றதாகவே தேசிய–அரசின் அரசாங்கம் இருக்கிறது.

எப்படியென்றாலும், நவ பாசிச ஆட்சியும் கூட மக்களின் பொருளியல் வாழ்க்கைத் தரம் பற்றி முற்றிலும் அலட்சியம் காட்ட முடியாது. அடக்குமுறைகளும், கவனத்தை திசைதிருப்பும் வெறுப்புப் பேச்சுகளும் மட்டுமே அதை அதிகாரத்தில் நீடித்திருக்க போதுமானதாக

இருக்காது. மந்த நிலைமையை எதிர்கொள்வதற்கும், வேலையின்மையைக் குறைப்பதற்கும் அது பயன்படுத்திடும் பொதுவான வழிமுறை, இறக்குமதிகளின் மீது கூடுதல் வரி போட்டு வசூலிப்பதாகும். இதைத்தான் அமெரிக்க அதிபர் டிரம்ப் முயற்சி செய்கிறார். எனவே, இதுவொன்றும் பொருளாதாரத்தை மீட்பதற்காக அவரே புதிதாகக் கண்டுபிடித்த வழிமுறையல்ல.

**அண்டை நாட்டை ஒட்டாண்டியாக்கும் கொள்கை**

இறக்குமதிகளின் மீது அமெரிக்கா விதிக்கும் கூடுதல் வரிக்கு பதிலடியாக, அதன் வர்த்தகக் கூட்டாளிகளும் தம்முடைய இறக்குமதி வரி விகிதங்களை மாற்றாமல் இருந்தால், அமெரிக்கா தன்னுடைய கிராக்கியை மற்ற நாடுகளின் உற்பத்தியாளர்களிடமிருந்து பறித்து தம் சொந்த உற்பத்தியாளர்களுக்கு மாற்றும் முயற்சியில் வெற்றிபெறக் கூடும். இதுபோன்ற சூழலில் அதன் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளிலும், வேலைவாய்ப்பிலும் சில அதிகரிப்பு சாத்தியமாகும். இவ்வாறாக வேலைவாய்ப்பில் ஏற்படும் அதிகரிப்பானது அதன் வர்த்தகக் கூட்டாளிகளுக்கு ஏற்படும் இழப்பில் இருந்து கிடைத்த பலனாக இருந்திருக்கும். அதாவது, உண்மையில் அமெரிக்கா தன்னுடைய நாட்டில் நிலவும் வேலையின்மையில் ஒரு பகுதியை தன்னுடைய வர்த்தகக் கூட்டாளிகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கும் என்பதே. மற்றவர்களுக்கு வேலையின்மையை ஏற்றுமதி செய்வதன் மூலம் உள்நாட்டு வேலைவாய்ப்பை அதிகரிப்பதை “அண்டை வீட்டாரை ஒட்டாண்டியாக்கும் கொள்கை” (beggar-thy-neighbour) எனலாம்.

ஆனால், அமெரிக்காவின் நலனிலிருந்து முன்னெடுக்கப்படும் இந்த ‘அண்டை நாட்டை ஒட்டாண்டியாக்கும்’ கொள்கையின் மீது மற்ற நாடுகள் அமைதி காக்காது. நாம் ஏற்கனவே குறிப்பிட்ட காரணங்களுக்காக, அமெரிக்காவின் இந்த பாதுகாப்புவாதக் கொள்கைகளால் உள்நாட்டில் ஏற்படும் வேலை இழப்பை எதிர்கொள்ளும் ஒரு வழிமுறையாக, அரசு தலையீட்டை மேற்கொள்ள முடியாது. எனவே, அவர்களும் இறக்குமதி வரிகளை (சுங்க வரிகளை) உயர்த்துவதன் மூலமே பதிலடி கொடுக்க முடிவு




செய்வார்கள். ஆனால் இவ்வாறு அவர்கள் பதிலடி கொடுத்தால், அதன் காரணமாக அமெரிக்காவிற்கு கிடைக்கும் எந்த நன்மையும் மறுக்கப்படுவதுடன், எல்லா நாடுகளிலும் அது வேலைவாய்ப்பை சரியச் செய்யும். அதற்கான காரணங்களைப் பின்வருமாறு பார்க்கலாம்.

ஒரு முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் விதிக்கப்படும் சுங்க வரி, பாதுகாப்புவாதம் எதிர்பார்க்கும் விளைவை வழங்க வேண்டுமெனில், அந்த வரி பணக்கூலியை உயர்த்தாமல், விலைகளை மட்டும் உயர்த்த வேண்டும். அதாவது, அந்த வரி, உண்மை ஊதியத்தைக் குறைப்பதாக அமைய வேண்டும்.

ஒரு நாட்டில் ஒரு கூடை சரக்கு உற்பத்தி செய்யப்படுவதாக ஓர் உதாரணத்தின் மூலம் பார்க்கலாம். அவ்வாறு உற்பத்தியாகும் ஒரு கூடையின் விலை ரூ. 100 என்று கொள்வோம். இந்த ஒரு கூடையை தயாரிக்க ரூ. 30 மதிப்பிலான பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன (இந்த கூடையில் வேறு சில பொருட்களும் கூட இறக்குமதியாகலாம்) ஓர் அலகு உற்பத்திக்கான கூலிச் செலவு ரூ. 45, ஓர் அலகில் கிடைக்கும் இலாபம் ரூ. 25. (அதாவது, ஓர் அலகுக்கு ஆகும் செலவில் மூன்றில் ஒரு பங்கு இலாபம்) அனைத்து இறக்குமதிகளுக்கும் ஒரே சீராக 10 சதவீத சுங்க வரி விதிக்கப்படுவதாகக் கொள்வோம். பண ஊதியம், ஒரு கூடையின் விலை உயரும் விகிதத்திற்கு நேர் விகிதத்தில் உயர்வதாக எடுத்துக் கொள்வோம். இலாபத்தின் விகிதம் குறைக்கப்படாது என்பதால், ஒட்டுமொத்த விலை 10 சதவீதம் உயரும். எனவே, இறக்குமதியின் மீது சுங்க வரி விதிப்பதால் கிடைக்கும் எந்தப் பலனும் இந்த உயர்வின் மூலம் இழக்கப்படும் என்றே தெரிகிறது. எனவேதான், ஒரு முதலாளித்துவ அமைப்பில் சுங்க வரியால் ஏதாவது நன்மை கிடைக்க வேண்டுமென்றால், அது உண்மை ஊதியத்தைக் குறைப்பதாக அமைய வேண்டும்.

எல்லா நாடுகளுமே சுங்கத் தீர்வையை உயர்த்தும் முடிவை மேற்கொண்டால், உண்மை ஊதியத்தில் பொதுவான வீழ்ச்சி ஏற்படும். ஆனால், ஏற்றுமதியில் எந்த மாற்றமும் இல்லாமல் தொடரும். சுங்க வரி உயர்வின் காரணமாக, எல்லா இடங்களிலும் விலையேற்றம் ஏற்படும். பணக்கூலியில் எந்த மாற்றமும் இல்லாத நிலையில், ஊதியத்தின் பங்கு, லாபத்திற்கு மாறுகிறது. இதன் காரணமாக எல்லா இடங்களிலும் மொத்த கிராக்கியில் வீழ்ச்சி ஏற்படும். நெருக்கடி மோசமாகும். முன்பைக் காட்டிலும் வேலையின்மை இன்னும் அதிகரிக்கும்.

எனவே, அமெரிக்கா உயர்த்தும் சுங்க வரிகளுக்கு எந்த பதிலடியும் தரப்படாவிட்டால், அமெரிக்காவில் வேலையின்மை குறையலாம், ஆனால் அதன் வர்த்தகக் கூட்டாளிகளுக்கு வேலையின்மை அதிகரிக்கும். அதே சமயத்தில் அவர்கள் பதிலடியாக நடவடிக்கைகளை முன்னெடுத்தால், அதனால் எல்லோருக்குமே வேலையின்மை அதிகரிக்கும். இப்படி எது நடந்தாலும், அமெரிக்காவின் இந்தப் பாதுகாப்புவாதம் உலக முதலாளித்துவ பொருளாதாரத்தில் பாதகமான விளைவையே உருவாக்கிடும்.

இந்த விஷயத்தை வேறுவிதமாகப் பார்க்கலாம். ஏற்கனவே விவாதிக்கப்பட்ட காரணங்களுக்காக, எல்லா இடங்களிலும் அதிக அரசாங்க செலவினங்கள் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், உலகச் சந்தையின் அளவு வரம்புக்கு உட்பட்டுள்ளது. ஒரு நாடு இந்த உலகச் சந்தையில் தனது பங்கை மட்டும் உயர்த்துவதன் மூலமே, அதன் வேலையின்மையைக் குறைக்க முடியும், அதாவது ‘அண்டை நாட்டை ஒட்டாண்டியாக்கும்’ கொள்கையின் மூலம் அதன் வேலையின்மையை ஏற்றுமதி செய்வதன் மூலம் மட்டுமே இதைச் செய்ய முடியும். ஆனால் அவர்கள் அனைவருமே அத்தகைய கொள்கையை பின்பற்றுவார்களானால் எவரும் ஆதாயம் அடைய முடியாது. அதேவேளையில் அனைவருமே கூட்டாக மோசமாகிவிடுவார்கள். ஏனெனில், எல்லா இடங்களிலும்

குறைந்த உண்மை ஊதியங்களின் விளைவாக உலகச் சந்தையின் அளவு சுருங்குகிறது.

ஆகவே, ஏகாதிபத்திய நாடுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ அரசாங்கச் செலவினங்களையும், அதனால் உலகச் சந்தையின் ஒட்டுமொத்த அளவையும் உயர்த்த முடியாது என்ற உண்மையில்தான் தற்கால ஏகாதிபத்தியத்தின் முரண்பாடு அடங்கியுள்ளது. வேலையின்மையைக் குறைப்பதற்கான அவர்களின் முயற்சியில் ஏற்படும் போட்டி 'அண்டை வீட்டாரை ஒட்டாண்டியாக்கும்' கொள்கைகளின் வடிவத்தை மட்டுமே எடுக்கும். இது அவர்கள் அனைவருக்கும் நிலைமையை மோசமாக்கும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உலகமய நிதி மூலதனத்தின் மேலாதிக்கம் இப்போது உலக முதலாளித்துவத்தை அதன் வக்கிரமான பிடியில் வைத்திருக்கிறது. அங்கு ஏகாதிபத்திய நாடுகள் வேலைவாய்ப்பின்மையைக் குறைக்க விரும்பினால் அண்டை நாட்டை ஒட்டாண்டியாக்கும் கொள்கைகளைப் பின்பற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

உலகப் போருக்குப் பிந்தைய முதலாளித்துவத்தின் ஒரு அம்சமாக இருந்து வந்துள்ள ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான போட்டி மட்டுப்பட்ட நிலைமையில் இருந்து மாற்றம் ஏற்பட்டு வருவதாகக் கூற முடியவில்லை. உலகமய நிதி மூலதனத்தின் மேலாதிக்க நிலைமை, அத்தகைய மாற்றத்தை தடுக்கிறது. உலகப் பொருளாதாரம் பல்வேறு செல்வாக்கு மண்டலங்களாக துண்டாடப்படுவதை அது விரும்பவில்லை. அவ்வாறான மாற்றம், உலகெங்கிலும் அதன் தடையற்ற எல்லை தாண்டிய ஓட்டத்தை தடுப்பதாக அமைந்திடும். ஆனால் போட்டி நிறைந்த 'அண்டை நாட்டை ஒட்டாண்டியாக்கும்' கொள்கையின் காரணமாக, உண்மை ஊதியம் குறைக்கப்படுவது, உலகில் நவ–பாசிசவாத போக்கை பலப்படுத்துவதை நோக்கி இழுத்துச் செல்கிறது.

இந்த நவ–பாசிசப் போக்கை வலுப்படுத்துவதாக, தற்கால உலகப் பொருளாதார நிலைமையின் மற்றொரு அம்சமும் அமைந்திருக்கிறது. ஏகாதிபத்திய நாடுகள் எங்கிலும், இராணுவச் செலவினங்களை அதிகரிக்கும் கூக்குரல் எழுகிறது. இராணுவ வாதத்தின் மீது டொனால்ட் ட்ரம்பிற்கு உள்ள ஆர்வத்தை தனியாகக் குறிப்பிட வேண்டியதில்லை. ஜெர்மனியில் அமையவுள்ள அரசாங்கமும், பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கமும் இராணுவச் செலவினங்களை உடனே உயர்த்திட திட்டமிட்டுள்ளன. உலகமய நிதிமூலதத்தின் எதிர்ப்பின் காரணமாக நிதிப் பற்றாக்குறை அதிகரிக்கப்படாது. செல்வந்தர்களே அரசாங்கங்களை வழிநடத்தும் இந்த உலகத்தில் அவர்களின் மீது வரி விதிப்பது என்ற கேள்விக்கே இடமில்லை என்பதாலும், ஏழைகளுக்கான நலத்திட்ட செலவுகளை வெட்டுவதன் மூலமோ, உழைக்கும் மக்கள் மீது வரிவிதிப்பதன் மூலமோ தான் பெரும் இராணுவ செலவினங்களுக்கு நிதியளிக்க வேண்டியிருக்கும்.

ஆகவே தற்கால ஏகாதிபத்தியம் எந்த சூழ்நிலைமையில் உள்ளதோ, அந்த நிலைமைகளில், உழைக்கும் மக்களின் மீதான தாக்குதல் தவிர்க்கவே முடியாததாகிறது. இந்த தாக்குதல்களை எப்படியும் நாம் எதிர்கொண்டுதான் வருகிறோம். வரவிருக்கும் மாதங்களில் இது இன்னும் தீவிரமாகும். அதனை மேலும் தொடர்ந்திட நவ பாசிசப் போக்குகள் மேலும் தீவிரப்படுத்தப்படும். உலகப்போர்களுக்கு பிந்தைய காலத்தின் முதலாளித்துவம் தனக்குத் தானே வைத்துக் கொண்ட "நலன் புரி அரசு", "சுதந்திர அரசு", "ஜனநாயக அரசு" என்ற பெயர்களில் செய்துவந்த விளம்பரங்களின் வெற்றுத்தனம் அம்பலமாகிறது.

ஒருவர் ஏகாதிபத்தியத்தின் கொடுரத்தையும், அது வியட்நாமில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் ஏற்படுத்திய போர்களையும் பார்க்காமல் கண்களை மூடிக்கொண்டால் அதன் மேற்சொன்ன பிரச்சாரங்கள் நம்பத் தகுந்ததாக தோன்றக்கூடும் என்பது இப்போது மென்மேலும் தெளிவாகிறது. "அநாகரீகம் அல்லது சோசலிசம் இந்த இரண்டில் ஒன்றை மனித குலம் தேர்ந்தெடுத்தாக வேண்டிய நிலைமையில் இருக்கிறது" என்ற ரோசா லக்சம்பர்க்கின் முழக்கம் மென்மேலும் பொருளுள்ளதாகிறது. அப்படியான ஒரு தருணத்தில்தான் நாம் இருக்கிறோம்.

**தமிழில்: இரா. சிந்தன்**

**10ம் பக்கத்தொடர்ச்சி...**

கண்டித்தும் கண்டன தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதைத் தொடர்ந்து உக்ரைனுக்கு இராணுவப் பாதுகாப்பு உதவிகளை தேவையான அளவிற்கு செய்ய வேண்டுமென முடிவு செய்துள்ளது. மேலும், நேட்டோவின் உறுப்பு நாடுகளுக்கு அச்சுறுத்தல் வரும்போது ஒருவருக்கொருவர் உதவுவது என்ற வகையில் கூட்டு பாதுகாப்பு உறுதிப்பாட்டையும் மேற்கொண்டுள்ளது.

நேட்டோவின் இராணுவப் பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டு அதிகரிப்பானது, ஒரு பக்கம் இராணுவத் தளவாட முதலைகளை மேலும், மேலும் கொழுக்க வைக்கும். புது, புது தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதிநவீன ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்பட்டு போருக்கு வழிவகுக்கும். இதற்கு போட்டியாக வளர்ந்து வரும் ரஷ்யா – சீனா தலைமையிலான அணிசேர்க்கையும் இதே நிலையை மேற்கொண்டால் அமைதியான சூழல் உருவாவதற்கு பதிலாக போர் சூழலையே அதிகப்படுத்தும். விரைவுபடுத்தும். விளைவு, மனித உடல்கள் பெருமளவிற்கு சிதைக்கப்பட்டு உயிர்கள் பறிக்கப்பட்டு எதிர்காலமே வாழ வழியற்ற சுடுகாடுகளாக மாறிவிடும்.

மறுபக்கம், நேட்டோ உறுப்புகள் இராணுவ பாதுகாப்பிற்கு ஒதுக்கப்படும் 5% நிதியை ஈடுகட்ட மக்களின் அன்றாட அடிப்படை – அத்தியாவசிய தேவைகளான உணவு, கல்வி, சுகாதாரம், மருத்துவம் இன்னும் பல தேவைகளுக்கான நிதி தேவைகளை குறைக்கக் கூடும். இதன் விளைவு விலைவாசி கழுத்தை நெரிப்பதோடு, சமூகத்தில் வர்த்தகமும், உற்பத்தியும், சேவையும் பெருமளவில் பின்னடைவைச் சந்திக்கும். இதனால், உறுப்பு நாடுகளுக்கு மட்டுமல்ல, தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்கிற மறுகாலனியாக்கக் கொள்கை எனும் சங்கிலியில் பிணைக்கப்பட்டுள்ள கண்ணிகளான இதர நாடுகளும் இவற்றின் மேலாதிக்க வெறிக்கு பலியாகும்.

இதிலிருந்து விடுபட, உலக மேலாதிக்கப் போர்வெறிக்கான நிதி ஒதுக்கீட்டு அதிகரிப்பை உடனடியாக நிறுத்தியாக வேண்டும். இல்லையேல், மக்கள் அன்றாட அடிப்படை தேவைகளான கல்வி, மருத்துவம், சுகாதாரம் போன்றவைகளுக்கான நிதி குறைக்கப்பட்டு, மக்களின் வாழ்வு சிதைக்கப்பட்டு வருவதைத் தடுக்க முடியாது.
அந்தந்த நாடுகளின் மக்கள் விரோத அரசுகளுக்கு எதிராக, மக்கள் கிளர்ந்தெழும் போது, போரைத் தடுக்க புரட்சியே ஒரே வழி என முழங்கிடுவோம்.

**-மோகன்**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

முன்வைத்த பிராந்திய சுயாட்சித் திட்டமும் அமைந்திருந்தன.

அவர்கள் இந்த முடிவுகளை எடுப்பதற்கு அன்றைய காலகட்டத்தில் (அப்பொழுது இலங்கையில் பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சி நிலவியது) இலங்கையில் நிலவிய அரசியல் சூழல் மட்டுமின்றி, சோசலிச நாடுகளான சோவியத் யூனியனிலும், சீனாவிலும் சிறுபான்மை தேசிய இனங்களின் பிரச்சினைக்குத் தீர்வாக முன்னையதில் சமஸ்டி முறையும், பின்னையதில் பிராந்திய சுயாட்சி முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டமையும் ஒரு காரணமாக இருந்திருக்கக்கூடும்.

ஆனால், சோசலிச அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விழைந்த இடதுசாரிக் கட்சிகள் ஆட்சியதிகாரத்துக்கு வருவதற்கான வாய்ப்புகள் கிடைக்காமல் போக, நாடு சுதந்திரம் பெற்றது முதல் கடந்த 76 வருடங்களாக இரண்டு விதமான முதலாளித்துவக் கட்சிகளே மாறி மாறி நாட்டை ஆட்சி செய்துள்ளன.

இந்த இரண்டு கட்சிகளும் நாட்டில் நிலவிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறியது மட்டுமினறி, அப்பிரச்சினையை தமது அரசியல் தேவைகளுக்காக அளவுக்கதிகமாகப் பயன்படுத்தியும் வந்துள்ளன. அதன் எதிர் விளைவாக தமிழ் – முஸ்லீம் இனவாதங்களும் வளர்ச்சி பெற்று, நாடு 30 வருடகால இனவாத யுத்தத்திலும் சிக்கி பேரழிவை அடைந்தது.

ஆட்சியில் இதுவரை காலமும் இருந்த அரசுகள், சிறுபான்மை மக்களுக்கு பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற தப்பான அபிப்பராயத்துடனேயே செயல்பட்டு வந்தன. ஆனால், அத்தகைய அணுகுமுறை வெற்றி பெறாதது மட்டுமின்றி, இனப்பிரச்சினை மென்மேலும் வளர்ந்தே வந்துள்ளது.

சொல்லப் போனால் அவர்களது நடவடிக்கைகள் புண்ணுக்கு பவுடர் பூசுவது போலவே இருந்தது. பார்வைக்கு புண்ணுக்கு மேலே நறுமணம் வீசும் பவுடர் காட்சியளித்தாலும், உள்ளே புண் மனைந்து நாற்றமெடுத்த வண்ணமே இருந்தது.

இந்தச் சூழ்நிலையில்தான், யுத்தம் காரணமாகக்கூட ஆட்சியை மாற்றாத நாட்டு மக்கள் 2022இல் எழுந்த பொருளாதார நெருக்கடியை முன்னிட்டு, பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டு, இறுதியில் 2024இல் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தினர்.

அதன் மூலம் நாட்டில் இதுவரை காலமும் இல்லாத வகையில் மூன்றாவது கட்சியான, சோசலிசம் பேசி வந்த ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை மக்கள் ஆட்சிபீடம் ஏற்றினர்.

புதிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், எல்லா விடயங்களிலும் சமத்துவம் பேசியது போலவே, இனப்பிரச்சினை விடயத்திலும் சமத்துவம் பேசி வருகின்றது.

இந்த விடயத்தில் அந்த அரசாங்கம் கற்பனாவாதத்தில் இருந்து வருவதை அவதானிக்க முடிகிறது. அதாவது, சில சக்திகள் இனவாதம் பேசுவதால்தான் நாட்டில் இனவாதம் இருப்பதாக அது கருதுகின்றது. அதன் காரணமாக, பிரச்சாரத்தின் மூலமும், சட்டத்தின் மூலமும் இனவாதத்தை ஒழித்து விடலாம் என அரசு கருதுகின்றது.

இந்த நிலைப்பாடு ஒருபுறமிருக்க, முன்னைய அரசுகள் கருதியது போல, சிறுபான்மை இனங்களின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீரத்துவிட்டால் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் எனவும் அரசாங்கம் கருதுகிறது. அண்மையில் பேசிய சில சிரேஸ்ட அமைச்சர்கள் இத்தகைய கருத்துகளை முன்வைத்திருக்கின்றனர். (வரவு செலவுத் திட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களைப் புறக்கணிக்காமல் அதிக நிதி ஒதுக்கி இருப்பதாக அவர்கள் கூறியிருக்கிறார்கள்)

உண்மை அது மாத்திரமல்ல. அதாவது இனப்பிரச்சினை என்பது வெறுமனே பொருளாதாரப் பிரச்சினை மட்டுமல்ல.

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது வரலாற்றுக் காரணிகளால் தோற்றம் பெற்றது. பின்னர் அது, ஆட்சியில் இருந்த சிங்கள பேரினவாத அரசுகளின் சிறுபான்மை இனங்கள் மீதான புறக்கணிப்பு கொள்கைகளால் (அதில் ஒன்று பொருளாதாரப் பாகுபாடு) வளர்ச்சி பெற்றது. அதன் தொடர் வளர்ச்சியால் இப்பொழுது அது அரசியல் அதிகாரம் பற்றிய பிரச்சினையாக மாற்றமடைந்துள்ளது.

இன்று இனப்பிரச்சினையின் மைய விடயமாக அரசியல் அதிகாரப் பிரச்சினையே இருக்கின்றது. அதாவது, இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை இனங்கள், குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே நிர்வகிக்கக்கூடிய அரசியல் அதிகாரத்தைக் கோரி நிற்கிறார்கள்.

அந்த அதிகாரத்தை அடைவதற்கு இரண்டு வழிகளை அவர்கள் நாடி நிற்கிறார்கள். ஒன்று, தாம் வாழ்கின்ற பகுதிகளுக்கு ஒன்றுபட்ட இலங்கை நாட்டு அமைப்பின் கீழ் முழு அதிகாரங்களுடன் கூடிய சுயாட்சி அமைப்பு முறையை எதிர்பார்க்கிறார்கள். அது சரிவராதபட்சத்தில் இரண்டாவதாக, முழு இறைமையுள்ள தனிநாடு நிறுவப்பட வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள்.

இத்தகைய ஒரு நிலைதான் முழு தமிழ் மக்களினதும் மன உணர்வாக இருக்கின்றது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வாறு இந்தப் பிரச்சினையைக் கையாளப் போகின்றது? தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வு கோரிக்கையை ஏற்று, அதை நிறைவேற்றுவதன் மூலம் அவர்களை ஒன்றுபட்ட இலங்கைக்குள் அணைத்து வைத்திருக்கப் போகின்றதா அல்லது அவர்களது கோரிக்கையை முன்னைய அரசுகள் போல் புறந்தள்ளி மீண்டும் பிரிவினைவாதப் போக்கில் தள்ளிவிடப் போகின்றதா?

ஆனால், ஜே.வி.பி. முன்னர் எதிரணியில் இருந்த காலங்களில் இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளையும் சிங்களப் பேரினவாத மனநிலையுடன் மூர்க்கமாக எதிர்த்த மனநிலையில் இருந்து இன்னமும் விடுபட்டதாகத் தெரியவில்லை. அதன் காரணமாக இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் தீர்வு காண்பதற்கான நிலைக்கு வருவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தயாராக இல்லாத நிலையே காணப்படுகின்றது.

இத்தகைய ஒரு நிலையில், இலங்கையில் இனவாதத்தை ஒழிப்பது பற்றிய அரசாங்கத்தின் பேச்சு ஒரு வெறும் கற்பனையே.

---

எந்தவொரு மக்கள் இயக்கத்தைக் கட்டமைக்கும்போதும், எமது ஆதரவாளர்கள், எதிரிகள், நடுநிலையாளர்களிடம் ஒரு அடிப்படையான ஆய்வும், விசாரணையும் அவசியம். நாமாக எமது அகவய உணர்வுக்கு ஏற்ப எந்த அடிப்படையும் இல்லாமல் பிரச்சனைகளை முடிவுசெய்யக் கூடாது. **–மாவோ**

‘Vaanavil’ is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# பலஸ்தீன இனப்படுகொலையும் அரசாங்கத்தின் மெத்தனப்போக்கும்!



**2023** ஒக்ரோபரில் இருந்து இஸ்ரேல் பலஸ்தீனத்தைத் தாக்கத் தொடங்கிய போதிலும், சோசலிச சாய்வைக் கொண்டிருந்த எங்கள் அரசாங்கம் அது சம்பந்தமாக ஓரளவு தெளிவற்ற கொள்கையைப் பின்பற்றி வந்தது.

Medicins Sans Frontieres மருத்துவர்களின் கூற்றுப்படி, பலஸ்தீனத்தில் குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வேண்டுமென்றே கொல்லப்பட்ட போதிலும், எங்கள் அரசாங்கம் இந்த விடயத்தில் அமைதியாகவே இருந்தது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களையும் கொலைகளையும் ஐ.நா.வே கண்டித்தது. காஸா குழந்தைகளின் கொலைக்களமாக மாறிவிட்டதாக சொல்லும் அளவுக்கு ஐ.நா. செயலாளர் நாயகம் அன்ரோனியோ குட்டெரெஸ் கூடச் சென்றார். பல இலங்கை தொழிலாளர்கள் இஸ்ரேலில் பணி புரிந்து வருவதாலும், இஸ்ரேலுக்கு செல்லும் தொழிலாளர்களை அரசாங்கம் ஊக்குவிப்பதாலும், அரசாங்கம் இந்த விடயத்தில் அமைதியாக இருப்பதாகப் பலருக்குத் தோன்றியது.

இஸ்ரேல் காஸா பகுதியைத் தாக்கத் தொடங்கிய 2023 ஒக்ரோபர் 7 ஆம் திகதியிலிருந்து 56,000 இற்கு மேற்பட்ட பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளனர், 131,848 பேர் காயமடைந்துள்ளனர். உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, 464 சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களை இஸ்ரேல் தாக்கியுள்ளதுடன், 727 சுகாதாரப் பணியாளர்களைக் கொன்றுள்ளது. மேலும், 933 சுகாதாரப் பணியாளர்களைக் காயப்படுத்தியுள்ளது. 113 நோயாளர் காவு வண்டிகளை (அம்புலன்ஸ்) சேதப்படுத்தி அல்லது அழித்துள்ளது.

இவை போர்க் குற்றங்களாக இருந்த போதிலும், எமது அரசாங்கம் ஆச்சரியப்படும் வகையில் மௌனம் காத்து வந்தது. ஆனால் இப்போது அரசாங்கத்தின் நிலை மாறி வருவதாகத் தெரிகிறது. சில நாட்களுக்கு முன்பு ஜே.வி.பி.யின் இளைஞர் பிரிவான சோசலிச இளைஞர் சங்கம் பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் இனப்படுகொலையைக் கண்டித்து மோட்டார் சைக்கிள் ஊர்வலம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

தேர்தலுக்கு முந்தைய வாக்குறுதிகள் பலவற்றை அரசாங்கத்தால் காப்பாற்ற முடியாவிட்டாலும், இந்த நாட்டின் மில்லியன் கணக்கான டொலர்களைக் கொள்ளையடித்த பலரை அரசாங்கம் பின் தொடர்ந்து சென்றுள்ளது. மேலும், யாரும் தப்ப முடியாது என்று தெரிகிறது. இதுவரை ஒரு முன்னாள் அமைச்சர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதிகளில் மூன்று பேர் விசாரணையில் உள்ளனர். அவர்களில் ஒருவரின் மனைவி மற்றும் பிள்ளைகளும் விசாரணையில் உள்ளனர். கூடுதலாக, பல முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் மீதும் விசாரணை நடந்து வருகிறது.

இவை அனைத்தும் நல்லவை என்றாலும், இந்த நாட்டின் ஏழைகள் இந்த ஆட்சியைத் தேர்ந்தெடுத்த போது இருந்ததை விட அதிகமாக பசியின் வேதனையை அனுபவித்து வருகின்றனர். வருமானம் குறைந்துள்ள நிலையில் அனைத்து உணவுப் பொருட்களின் விலைகளும் எகிறியுள்ளன. சாதாரணமாக, ஒரு தேங்காயின் விலை 200 ரூபாயை எட்டியுள்ளது.

ஆனாலும், வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பளம் அதிகரிக்கப்படவில்லை.

தனியார்துறை நிறுவனங்களில் கொவிட் தொற்றுநோய் காலத்தில் குறைக்கப்பட்ட சம்பளம் அதே நிலையிலேயே இன்னமும் இருக்கிறது. மக்களை துயரத்துக்குள்ளாக்கும் வகையில் மின்சாரக் கட்டணம் 15 சத வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், எரிபொருள் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் நாட்டின் குழந்தைகளின் வாழ்க்கையைப் பாதிக்கின்றன. இலங்கை கொள்கைகள் ஆய்வு நிறுவனம் நடத்திய ஆய்வின்படி, தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக பெருந்தோட்டத்துறையில் பாடசாலைப் படிப்பை இடை நிறுத்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

பொலிஸ் இலாகா வழங்கியுள்ள தரவுகளின்படி, 2022 ஜனவரியில் 1,676 ஆக பதிவாகியிருந்த சிறு குற்றங்களின் எண்ணிக்கை 2023 நொவம்பர் இறுதிக்குள் 29,908 ஆக அதிகரித்துள்ளது. ஊதியங்கள் அதிகரிக்கப்படாததால், சிறு குற்றங்களின் தொகை அதிகரித்து வருகின்றது.

நாடு சர்வதேச நாணய நிதியத்தின் கட்டுப்பாடுகளால் பிணைக்கப்பட்டுள்ளதால், விடயங்களை உடனடியாக மாற்றுவது கடினம். ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களுக்கு முன்னர் வழங்கிய நடைமுறைச் சாத்தியமற்ற வாக்குறுதிகளினால் ஏற்பட்ட விளைவே இது. எதிர்காலத்தில் அரசாங்கம் ஏழைகளின் சுமையைக் குறைக்கும் என நம்புகிறோம். ஆனால், பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் இனப்படுகொலை குறித்த அதன் கண்ணோட்டத்தை மாற்றுவதற்கு அரசாங்கத்துக்கு எடுத்த காலத்தை விட இது வேகமாக நடக்க வேண்டும்.

– **‘டெயிலி மிரர்’, யூலை 2**